செங்காந்தள் - போர்

முனைவர் த.மகேஸ்வரி & முனைவர் இரா. சிங்கராஜா

புத்தகக்குறிப்பு

9 789391 115470

செங்காந்தள் - போர்

Title Verso

TITLE OF THE BOOK: **Chenkaantal - War**

புத்தகத்தலைப்பு : செங்காந்தள் - ***போர்***

EDITORS : Dr D. Maheswari & Dr R. Singaraja

தொகுப்பாசிரியர் : முனைவர் த.மகேஸ்வரி & முனைவர் இரா. சிங்கராஜா

FIRST EDITION : 2021

முதல் பதிப்பு : 2021

PAGES/பக்கங்கள்: 111

PRICE/விலை : 300

ISBN NUMBER : 978-93-91115-47-0

CONTACT NUMBER: 8526769556

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001.
Tamil Nadu

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Rear side,
Virudhunagar – 626001.
Tamil Nadu

பதிப்புரிமை/**Copyright © 2021 – முனைவர் த.மகேஸ்வரி /Dr. D.MAHESWARI**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன் என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையை சூடியவன் முருகன் என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சார பெருமையை அடையாளப்படுத்தும் செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது.

தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ் சமூகம் தமிழ்த்தேன் பருக தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமிழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இந்நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளை புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது.

மதிப்புரை

நல்லாசிரியர் மு.அழகுராஜா அவர்கள் **புறநானூறு காட்டும் மறத்திலும் அறம்** என்ற தலைப்பில் பண்டைகாலத்தில் பின்பற்றி வந்த போர் நெறிகளையும் போர் அறங்களையும் புறநானூற்றின் வழி எடுத்துரைத்துள்ளார். தமிழ் வேந்தர்கள் படையெடுத்துச் செல்வதற்கு முன்பு பறையறைந்து தெரிவித்தனர். போரில் அப்பாவி மக்கள் அழிந்து விடக்கூடாது என்பதற்காக பறையறைந்துத் தெரிவிக்கும் பழக்கத்தை வைத்திருந்தனர். போரைத்தவிர்க்கும் மனநிலையும் போரின்றி வாழும் அமைதிச்சூழலை அவாவும் நிலையும் புறநானூற்றுப் பாடல்களில் காணப்படுகின்றதையும் விளக்கமுறைத் திறனாய்வாகப் பதிவுசெய்துள்ளார். சங்ககாலப் புலவர்களின் ஆழ்ந்த கல்வியறிவும் சிந்தனை வளமும் குறிக்கோள் வாழ்க்கையும் அமைதியான சூழலை நாடச்செய்துள்ளன. வாழ்வின் விழுமியக் கருத்துக்களை எடுத்துக்கூறி அரசர்களுக்கிடையே அமைதியை ஏற்படுத்துத்தியுள்ளனர் புறநானூற்றுப் புலவர்கள். ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பதைப்போல புறநானூற்றுப் புலவர்கள் பண்டைத்தமிழர்கள் மறத்தையும் அறத்தையும் ஒரு சேரப்பாடியுள்ளனர் என்பதை தன் ஆய்வின் மூலம் பதிவு செய்துள்ளார். அதுமட்டுமின்றி பழந்தமிழர் மறத்திலும் அறம்

திறம்பாதவர் என்ற கருத்தை முத்தாய்ப்பாக எடுத்துரைத்துள்ளார். அதுமட்டுமன்றி அரச குடும்பத்தில் ஏற்பட்ட பூசலைத் தவிர்த்து புல்லாற்றூர் எயிற்றியனார் போன்ற அமைதி விரும்பிகளான புலவர்களின் கருத்துகளையும் எடுத்துரைத்துள்ளது உலக அமைதிக்கு இன்றியமையாததாக அமைந்துள்ளது.

முனைவர் சமத்துவம் அவர்கள் **புறநானூறும் வஞ்சித்திணைப் போரும்** என்ற தலைப்பில் தம் நாட்டில் வாழும் குடிகள் வளத்துடன் வாழ்வதற்குப் போதிய இடமின்மையாலும் இடம் சிறிதென்னும் ஊக்கமேலீட்டினாலும் வஞ்சிப்போர் நிகழ்ந்திருப்பதை தொல்காப்பியம், புறநானூறு ஆகிய பழந்தமிழ் இலக்கண இலக்கியத்தின் வழியாக எடுத்துரைத்துள்ளார். ஆநிரை கவர்தலும் மீட்டலும் போர்க்குரிய முதன்மைக் காரணங்களாக இருந்த நிலைமாறி பொருளாதார வளத்தைப் பெருக்கும் போர் முறையாக வளர்ச்சிபெற்றது. ஆநிரைக் கவர்தலாகிய வெட்சிப்போர் சில நேரங்களில் வஞ்சிப்போருக்குக் காரணமாக அமைந்திருக்கலாம். ஆனால் வஞ்சிப்போர் என்பது ஆநிரை கவர்தல் என்ற நிலையில் தொடங்காமல் நேரடியாக வேந்தர்களிடையே தோன்றும் மோதலை விளக்குவதாகவே வஞ்சிப்போர் அமைகிறது. போரில் வெற்றிப்பெற்றவருக்கு பெருமையும் மகிழ்ச்சியும் தோன்றினாலும் தோற்றவருக்கு

அவமானத்தை ஏற்படுத்துகிறது. தோற்றவரின் நாடு தீக்கிரையாக்கப்பட்டது. நீர்நிலைகள் அழிக்கப்பட்டன. போரின் விளைவுகள் பேரிழப்புகளும் அவலங்களும் ஏற்பட்டுள்ளன என்பதை தன் ஆய்வின் மூலம் எடுத்துரைத்துள்ளார்.

முனைவர் இரா. சிங்கராஜாவின் **களவழி நாற்பதில் களிற்றுப்போர்** என்ற தலைப்பிலான ஆய்வானது களிற்றுப் போர் பற்றியது. களிற்றுப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகிய நான்கு வகையான படைகளுள் களிற்றுப்படையின் போர் முறையை வியந்து பாடி கழுமலப் போரில் சோழன் கோச்செங்கணான் வெற்றி பெற்றதைப் பொய்கையார் சிறப்பித்துப் பாடியதை எடுத்துரைத்துள்ளார். களிற்றுப் போர் பற்றியும் களிற்றுப் படையின் அழிவு பற்றியும் நுட்பமான திறனாய்வின் வழி பதிவு செய்துள்ளார். களவழி நாற்பது களிற்றுப்போரினால் ஒருவனுடைய வெற்றி தோல்வி நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. சோழன் கோச்செங்கணான் வெற்றிபெற அவனது களிற்றுப்படையே காரணமாக அமைந்தது. தொல்காப்பிய புறத்திணையியலிலும் மரபியலிலும் சுட்டப்பட்ட நால்வகைப் படைகளைப் பற்றியச் செய்திகளைப் பாடாமல் களிற்றுப்போர், களிற்றுப்படையின் அழிவு ஆகியவற்றை மட்டுமே இன்றியமையாததாக

பொய்கையார் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கப் பதிவாக அமைந்துள்ளது.

முனைவர் த.மகேஸ்வரி அவர்கள் **வில்லிபாரதத்தில் வீமனின் வீரம்** என்ற தலைப்பில் வீமனின் வீரதீரப் போர் செயல்கள் பற்றி எடுத்துரைத்துள்ளார். துரியோதனனால் திரௌபதி அடைந்த துன்பத்தை நீக்க வீமனிட்ட வீரசபதமும் அதில் வெற்றி பெற்ற செயல்களும், இடிம்பன், பகன், புண்டரீகன், மணிமான், மல்லன், கீசகன் மற்றும் உபகீசகர்கள் போன்றோருடன் பல்வேறு சூழல்களில் போரிட்டு வெற்றி பெற்ற நிகழ்வுகளையும், துரியோதனன் அவன் தம்பிமார்கள் அனைவரையும் கொன்ற விதத்தினையும் ஆராய்ந்து வீமனின் வீரத்தை எடுத்துரைப்பதே ஆய்வுக்கட்டுரையின் முக்கிய அம்சமாகும். பல அரசர்களையும், துரியோதனன் தம்பிமார்களையும், சபதமிட்டதற்கேற்ப துச்சாதனனையும் அழித்தவிதமும் வீமனின் யானைபலத்தைப் பறைசாற்றுகின்றன. இறுதியில் துரியோதனனைக் கொன்ற நிகழ்வுகளே வீமனது அசுர, இராக்சச, பைசாச, சர்ப்ப மற்றும் சகுன பண்புகள் நிறைந்த இராட்சச வீரதீரப்போரிடும் குணத்தைத் தெளிவுறக் காட்சிப்படுத்தின. இவ்வாறு வீமனின் வீரதீரச்செயல்கள் மற்றும் போர்களத்தில் வீமன் போர்புரிந்த விதங்கள் அனைத்தும் இப்புத்தகப்பகுதி ஆய்வுக்கட்டுரையின் வழி ஆராயப்பட்டுள்ளன.

உள்ளடக்கம்

வ.எண்	தலைப்பு	ப.எண்
1.	புறநானூறு காட்டும் மறத்திலும் அறம் மு.அழகுராஜ்	1-26
2.	புறநானூறும் வஞ்சித்திணைப் போரும் முனைவர் கரு. சமத்துவம்	27-61
3.	களவழி நாற்பதில் களிற்றுப்போர் முனைவர் இரா.சிங்கராஜா	62-87
4.	வில்லிபாரதத்தில் வீமனின் வீரம் முனைவர் த.மகேஸ்வரி	88-111

***Puranaanooru*: Ethics in War**

M.Alaguraj, P.G.Assistant (Rtd), Avaniyapuram,
Madurai – 625012, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-5331-3057
DOI: 10.5281/zenodo.5598454

Abstract

Everyone who knows the Tamil language must be familiar with Puranaanooru*. All the kings mentioned in the collection of poems are fearless and right-minded to the people. Of the four hundred songs, 109 songs are about valour. Even the fight with ethics, they lived by the rules of war. According to Tolkappiyar, the songs sing about the ancient Kings and the oblivion that they attacked and lived by fighting with the sword. Some of the songs proclaim war between the two great kings and besiege of the enemy's fort. One can also see the situation here where King Kopperuncholan, who was fighting with his people on the battlefield, was told by Pulwar Pullathur to stop the war to avoid mortality. The king also accepts the words of the poet and stops the war for goodness. Thus, one can see the news of the war among the warlords and the cleverness of the poets to stop the kings before the war and to go on the path of morals and wisdom.*

Keywords: *Puranaanooru*, Warriors, Ethics, War

References

[1] SaminathaIyer. U.V. (P.A.). *Purananuru*. Tamil University, Thanjavur, 1988.

[2] Tamiḻaṇṇal. *puṟanāṉūṟṟu short Film*, Meenakshi Bookstore, Madurai-1, 2009.

[3] Salomon Papaya. *Purananuru*. New Series Type Kavita Publication, Chennai, 2019.

[4] My mentor is Prof. Ira Mohan, *Multi-faceted Purananuru*, Vanathi Publishing, 2017.

[5] Tamil Velu, A. *Kalavazhi field and time*. Southern Farm Publishing House Southern, 1997.

Isbn Number: 978-93-91115-47-0

புறநானூறு: மறத்திலும் அறம்

மு.அழகுராஜ், முதுகலை ஆசிரியர் (ப.நி), அவனியாபுரம்,
மதுரை - 625012, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-5331-3057
DOI: 10.5281/zenodo.5598454

ஆய்வுச்சுருக்கம்

தமிழறிந்தார் அனைவருமே புறநானூற்றைக் கற்க வேண்டும். புறநானூற்றுத் தமிழரைப் போன்றே அஞ்சா நெஞ்சமும், மானஉணர்வும் பெற்றவராகத் திகழ வேண்டும். புறநானூற்றில் 109 பாடல்கள் மறத்தைப் பற்றியே தெரிவிக்கின்றன. போர் நெறிமுறைகளுடன் போரிட்டு வாழ்ந்தனர். தொல்காப்பியர் கருத்துப்படி ஆனிரை கவர்ந்து வெட்சிக்கரத்தைப் போர் நடத்தி வாழ்ந்து தொன்மைமிக்க மறவர்களை, மறக்குடியினை இப்பாடல்கள் பாடுகின்றன. சிலபாடல்கள் இருபெரும் வேந்தர்களுக்கிடையே போர் அறிவிப்பு செய்து எதிரி நாட்டுக் கோட்டையை முற்றுகையிடும் போது ஔவையார், கோவூர்கிழார் போன்றோர் போரினை ஏற்படும் விளைவுகளை எடுத்துக்கூறி அறநெறிகூறி ஒற்றுமைப்படுத்திய நிகழ்வுகளை அறியலாம். மேலும் போர்க்களத்தில் தன்மக்களுடன் போரிட நின்ற மன்னன் கோப்பெருஞ்சோழனுக்கு புலவர் புல்லாற்றூர்

Isbn Number: 978-93-91115-47-0

எயிற்றினார் போரை நிறுத்தும்படி எடுத்துரைக்கின்ற நிலையையும் இங்கு காணலாம். இவ்வாறு வேந்தர்கள் போர்நெறியோடு போர் நடத்தியச் செய்திகளையும் போர் வருமுன் தடுத்து நிறுத்தி மன்னர்களை அற வழிப்பாதையில் செல்வதற்குப் புலவர்களின் சாதூரியத்தையும் இங்கு காணலாம்.

கலைச்சொற்கள்: புறநானூறு, மறவர்கள், மறம், அறம்

முன்னுரை

சங்க இலக்கியத்தில் ஒன்றாகிய புறநானூறு முதன்முறையாக 1894-ஆம் ஆண்டு உ.வே.சாமிநாத ஐயர் அவர்களால் பதிக்கப்பட்டது. புறநானூறு என்னும் இலக்கியம் தமிழர்களின் பழம்பெரும் வீர இலக்கியம் ஆகும். இது போர் மரபினையும் சித்தாந்தத்தினையும் எடுத்துரைக்கிறது. இன்று உலகளாவிய நிலையில் பேசப்படும் போரியல் செய்திகள் உலக நாடுகளின் கவனத்தைப் பெற்றதாகும். சங்கப்போரியல் செய்திகளில் நெறிபிறழ்ந்ததாகவோ, முறை தவறியதாகவோ இதுவரை சான்றுகள் இல்லை. புறநானூறு தமிழனின் வரலாற்றுக் களஞ்சியம். நாகரிகப் பண்பாட்டுக் கருவூலம். சங்ககாலத்தில் புலவர் தம் பெருமித வாழ்வும் மன்னர்களின் பன்முகச் சிறப்புகளும் மக்களின் வாழ்வு நெறிகள் அனைத்தும் அடங்கியது புறநானூறு.

Isbn Number: 978-93-91115-47-0

புறநானூறு - ஒரு வரலாற்றுக் களஞ்சியம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத் தமிழக வரலாற்றை எழுதுவதற்குப் புறநானூறே பெரிய ஆதார நூலாகும். மூவேந்தர்களுக்குள் நிகழ்ந்த போர்கள், வேந்தர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் இடையே நிகழ்ந்த போர்கள், வேந்தர்களிடையே இருந்த பகையைப் புலவர் நீக்கியது, ஒளவையார் அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றது, பெருந்தலைச் சாத்தனார் தம் உரையால், தமையனைக் கொல்ல விரும்பிய இளங்குமணன் மனத்தை மாற்றியது, மன்னன் வரிவாங்கும் நெறி பற்றிக் கூறிப் பிசிராந்தையார், பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அறம் உரைத்தது. வெள்ளைக்குடி நாகனார் கிள்ளி வளவனுக்கு அறிவுரை கூறி மக்களின் நிலத்திற்கு விதிக்கப்பட்ட பழைய வரியை நீக்கியது எனப் பலப்பல வரலாற்று நிகழ்வுகள் புறநானூற்றில் இடம்பெறுகின்றன. எனவே இந்நூலை ஒரு **வரலாற்றுக் களஞ்சியம்** எனலாம்.

புறநானூறு ஒரு பண்பாட்டு ஆவணம்

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் என்ற நூலை எழுதிய அறிஞர் கனகசபைப்பிள்ளை அவர்களும் தமிழர்வரலாறு எழுதிய அறிஞர் பி.டி.சீனிவாச ஐயங்காரும் புறநானூற்றையே பெரிய சான்றாதாரமாகக் கொண்டனர். ஒருவரது

Isbn Number: 978-93-91115-47-0

செல்வம் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் வளர்க்க வேண்டும் என்று இந்நூல் கூறும்.அரசரது வெண்கொற்றக்குடை வெயில் மறைப்பதற்கல்ல; குடிகளுக்கு நிழல் தர என இந்நூலிற் புலவர் அறிவுறுத்துவர். இவ்வுலகில் புகழ்பெற வாழ்வோரே மறுமையுலகு எய்துவர் என இந்நூல் காட்டும்.கல்வியே ஒருவனுடைய மேன்மையைக் காட்டுமேயன்றிக் குடிப்பிறப்பன்று என இந்நூல் கூறும். எங்கு மனிதர் நல்லவராய்த் திகழ்கின்றார்களோ அங்கு நிலமும் நல்லதாக அமையும் என இந்நூலின் ஒரு பாட்டு உரைக்கும்.சான்றோர் வாழும் சூழலில் இருப்போர் இளமை மாறாது இருப்பர் என ஒரு செய்யுள் (191) காட்டும். இவ்வாறு பல அரிய பண்பாட்டுக் கூறுகளையும் வாழ்நெறிகளையும் புறநானூறு வழி அறியலாம்.

போரிடக்காரணம்

அன்றைய தமிழ் மக்கள் போரிடக்காரணம் இருந்தது. தாம் வாழும் நாடு சிறியது. அதை விரிவு படுத்த வேண்டும் என்ற எண்ணம்; மாற்றார் தன் சொல்லுக்கு அடங்கித் தன்னை வழிபட வேண்டும். இந்த மண் மற்றவர்க்கு அல்ல; எனக்கே சொந்தம் என்னும் கருத்து காரணமாகப் (8) போர் நடந்தது. எதிரிநாட்டை ஆள்பவன் இளம்பிள்ளை. இப்போது சென்றால் அவன்

Isbn Number: 978-93-91115-47-0

நாட்டை எளிதாகக் கைப்பற்றிவிடலாம் என்று ஒருவனை வீழ்த்த ஏழுபேர் கூட்டணியாகச் (76) சென்று போரிட்டதும் உண்டு. குமணனுக்கும் இளங் குமணனுக்கும் (164) ஏற்பட்ட சண்டை ஆட்சி உரிமை கோரி அண்ணன் தம்பி போட்டபோர். அசோகனுக்கும் அவனுடைய தம்பியர்க்கும் நடந்த உரிமைப் போர் இந்திய வரலாறு.

போர் செய்யும் முறை

அக்காலத்தில் நிகழ்ந்த போர் முறைகளைத் தொல்காப்பியம் எடுத்தியம்புகின்றது. பழங்காலத்தில் ஐந்து நிலைகளில் போர் நிகழ்ந்ததைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. இவ்வைந்து நிலைகளுக்கும் ஐவகையான பூக்களை அணிந்தனர்.

தொல்காப்பியர் கருத்துப்படி ஆ நிரைகளைக் கவர்தலே போரின் தொடக்கமாகும் இதற்கு வீரர்கள் வெட்சிப்பூச் சூடுவர். ஆ நிரைகளை மீட்க வருவோர் கரந்தைப் பூச்சூடுவர். கோட்டையில் நின்று போர் செய்வோர் உழிஞைப்பூச் சூடுவர். கோட்டையை முற்றுகை இடுதலைத் தவிர்ப்பதற்கு நொச்சிப்பூ சூடுவர். மட்டுமல்லாது இரு பெரும் வேந்தர்களும் ஒருகுறிப்பிட்ட இடத்தில் நின்று போர் செய்வதற்குத் தும்பைப்பூ சூடுவர். இப்போரில் நால்வகைப் படைகளையும் பயன்படுத்துவர். புறநானூறில் நால்வகைப் படைகளையும்

Isbn Number: 978-93-91115-47-0

பயன்படுத்துவதால் பெரும்பான்மையும் தும்பைப் போரைப் பற்றியே அதிகமாகப் பேசுகிறது எனலாம். மேலும் அக்காலத்தில் போருக்கென சில விதிமுறைகள் இருந்தன. அன்று நேருக்கு நேர் வாள், வில், ஈட்டி போன்றவை கொண்டு போரிடும் முறைகள் காணப்பட்டன.

உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும், இழிந்தன்றும் இலனே அவரை
அழுங்கப் பற்றி அகல் விசும்பு ஆர்ப்புஎழ்க்
கவிழ்ந்து நிலம்சேர அட்டதை (புறம் – 77)

என்ற வரிகளில் தன் எதிரில் வந்து நின்ற பகைவர்களை இறுகப் பிடித்து ஆகாயத்தில் ஒலியெழ உடல் நிலத்தில் விழ வீழ்த்தியதை எடுத்தியம்புகிறது. எனவே அக்காலத்தில் நேருக்கு நேர் எதிர்த்து போரிட்டனர் என்பதை அறியலாம்.புறமுதுகிட்டு ஓடும் எதிரியையும் ஆய்தம் இன்றி நிர்கதியாய் நின்றோரையும் தாக்குதல்கூடாது என்பது அக்கால மரபு.

காவல் மரம்

போர்க்காலச் சூழலின் பகைவரது காவல் மரத்தில் யானையைக் கட்டுவர். அதற்கு, பகைவரை வெற்றி கொண்டதனைக் காட்டும் அடையாளமாகக் கொண்டுள்ளனர். பகைவர் அதனைத் தடுத்தால் போர் புரிய வேண்டும். இல்லையெனில் பணிந்து போக

 Isbn Number: 978-93-91115-47-0

வேண்டும். கடி மரம் - காவல் மரம். இதனைப் பண்டை போர் மரபாகக் கொண்டிருந்ததை அறிகிறோம்.

பண்டைய போர் முறைகளும், மரபுகளும்

இயற்கையின் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்றவாறே ஒவ்வொரு நிலத்துள் வாழும் உயிரினங்களின் செயல்கள் யாவும் அமைகின்றன. அது மட்டுமின்றி, புற உலகினில் தம்மைத் தகவமைத்துக் கொண்டு வாழும் உயிரினங்கள் பிற உயிரினங்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சூழலையும் முதன்மை யம்சமாய் பெற்றே உயிர்களின் வாழ்வு அமைகின்றது. இவ்வுயிரினங்களிலேயே மனிதன் தனித்த வளர்ச்சியை எய்தினான். மனிதனை பொறுத்தமட்டில் வேட்டையாடுதலில் தொடங்கிய பயணம் கால்நடை வளர்ப்பு, சிறு சாகுபடியென புத்துயிர்ப் பெற்று, உற்பத்திக் கருவிகளை உருவாக்கி, நிலையானதொரு வாழ்வைத் தொடங்கினான் எனலாம். எனின், இஃது பெரும் பேராட்டத்தின் விளைவேயாகும்.

இனக்குழு வாழ்வில் வேட்டையில் கவனம் செலுத்தியவன், உணவுக்கான பெரும் போராட்டத்தைச் சந்திக்க வேண்டியிருந்தது. உணவுப்பற்றாக்குறையே அதன் முதன்மைக் காரணி என்பர் சமூகவியலாளர். அதன்பின்னர் தனிநபருக்குரிய சொத்தாய் மாற்றம் பெற்ற காலம் தான் போராட்டத்தின் விளைவுகளை

Isbn Number: 978-93-91115-47-0

எல்லையில்லாது தோற்றுவித்தது. ஒரு குழு பிற குழுவை அடிமைப்படுத்துவதும், ஓர் குழுவிலுள்ளோரையே அக்குழுவிலுள்ள சிலர் அடிமைப்படுத்தியும், உற்பத்திசெய்யவும், ஏவல் தொழில்செய்யவும் நிர்பந்தப்படுத்தியும் போரிட்டு வெற்றி பெற்று வரவும் என பல வகையில் நிர்பந்திக்கப்பட்டனர்.

குறிப்பாக அடிமைச்சமூகம் உருவாக, மன்னர் சமூகத்தின் மேற்கூறிய காரணங்களே முதன்மைக் காரணியாய் இருந்தன. போர்கள் அடிப்படையில் செல்வப்பெருக்கம், எல்லையை விரிவுபடுத்துதல், மண்ணாசை, வலிமைகருதுதல், யார்பெரியவன் எனும் போக்கு, ஓர் குடும்பத்திற்குள்ளான முரண் ஆகியன அடிப்படைக் காரணியாய் அமைந்திருக்கின்றன என்பர். இவற்றுள், கி.மு.இறுதி - கி.பி.தொடக்க காலத்தில் நிகழ்ந்த போர் முறைகளையும், அதன்பின் புலங்களையும் சுருக்கமாகக் காணலாம்.

தொல்காப்பியம் காட்டும் பண்டைய போர்கள்

தமிழுலகில் முதலிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் பண்டைப்போர் பற்றிப் பல கருத்துக்கள் காணப்படுகிறது. ஒவ்வொரு நிலப்பகுதிக்கு ஏற்பவே போர்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பதை 'புறத்திணையியல்' எனும் இயலின்வழியாக புரிந்து கொள்ள முடிகின்றது. உதாரணமாக,

Isbn Number: 978-93-91115-47-0

- ❖ மலையும், மலை சார்ந்த பகுதிகளிலும் (குறிஞ்சி) ஆநிரைகளைக் கவர்தல், அதனை மீட்டலுக்குமான போர்கள்.
- ❖ காடும், காட்டைச் சார்ந்த பகுதிகளிலும் (முல்லை) தன்மை மதியாத வேந்தனை எதிர்த்தும், காட்டு வளம் மீது கொண்ட ஆசையின் பொருளாலும் நிகழ்ந்த போர்கள்.
- ❖ வயலும், வயலைச் சார்ந்த பகுதிகளிலும் (மருதம்) எயிலை முற்றுகையிட்டு நாட்டைக் கைப்பற்றுதலும், எயிலைகாத்து தம் நாட்டைப் பாதுகாத்தலுக்குமான போர்கள்.
- ❖ கடல், கடல் சார்ந்த மணற்பகுதிகளில் (நெய்தல்) வலிமை குறித்தப் போர்கள் என நான்கு வகைப் போர்கள் நிகழ்ந்ததாகத் தொல்காப்பியத்தின் புறத்திணையியலில் மிக தெளிவாக தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார்.

இவை அடிப்படையில் ஆநிரை கவர்தல் மீட்டலுக்குமான போர்கள் - அந்நிலப்பகுதியில் ஆநிரைகளே செல்வமாகக் கருதப்பட்டன. மண்ணாசைப் போர்கள் - காடும் அதன் செழிப்பும் முக்கிய காரணமாயிருக்கலாம்; எயில் முற்றுகை பாதுகாத்தல் - நாட்டின் செல்வமும், எயிலைக் கைப்பற்றினால் நாட்டையே கைப்பற்றியதாக கருதியிருக்கலாம்;

Isbn Number: 978-93-91115-47-0

வலிமைப் போர்கள் - உற்பத்திப் பெருக்கமும், பண்டமாற்றும் யார் அப்பகுதியில் ஆள்வது என வலிமையை நிரூபிக்க சேர, சோழ, பாண்டியர் எனப் பலரும் போரிட்டு இருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

மேற்கூறியவை தொல்காப்பிய இலக்கணம் பதிவு செய்த போர் முறைகளாகும். இப்போர் முறையின் அடிப்படையிலேயே சங்க இலக்கியத்துள் பல பாடல்கள் காணப்படுகின்றன. பண்டைய சமூகச் சூழலையும், போர் பற்றியும், தமிழகத்தை ஆண்ட மன்னர் பற்றியும், வரலாற்றுக் கருவூலமாம்; புறநானூறு, பதிற்றுப்பத்து மற்றும் அகப்பாடல்கள் வழியாகவும், தொல்பொருள் ஆராய்ச்சிகள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள், மெய்க்கீர்த்திகள், நாணயங்கள், பயணக் குறிப்புகள், ஆவணங்கள் என இன்ன பலவற்றிலும் பண்டைய சமூகத்தில் போர், அதன் முறைகளை பலவற்றையும் காண முடியும்.

புறநானூற்றில் அறமரபுகள்

பண்டைக் காலத்தில் சில வரையறைகளோடு போர்கள் நிகழ்த்தப் பட்டிருக்கின்றன. குறிப்பாகப் போருக்குச் செல்வோர், குறிப்பிட்ட பூக்களைச் சூடுதல் மரபாக இருந்துள்ளது. ஒவ்வொரு மன்னனும் ஒரு குறிப்பிட்ட பூவை சூடி போர்புரிவது மரபு.

Isbn Number: 978-93-91115-47-0

பூக்களைச் சூடி போரிடும் மரபைக் கொண்டிருந்தனர். அதனால் போருக்குச் செல்லும் முன்பு பூச்சூட வருமாறு வீரர்களுக்கு அழைப்பு விடுத்தனர். கழாத்தலையாரின் புறப்பாடல் ஒன்றில்,

மூதிலாள ருள்ளும், காதலின்
தனக்கு முகந் தேந்திய பசுபொன் மண்டை
இவற்கு ஈக என்னும் அதுவுமன் றிசினே
கேட்டியோ வாழி பாண! பாசறைப்
பூக்கோள் இன்று என்று அறையும்
மடிவாய் தண்ணுமை இழிசினன் குரலே! (புறம். பா. 289 : 5-10)

என்று வெட்சிப் போர் புரிய வேண்டி (ஆநிரை கவர்தல்;) போர் பறையை அறிவிக்க, மறவர் பலரும் திரண்டனர். அப்போது மன்னன் அவர்களோடு விருந்து உண்ணுகின்றான். அங்கு மறவர்கள் அனைவருக்கும் ‘கள்’ வழங்கப்படுகிறது. பாசறைக் கண்ணே! இனி நிகழ்தற்குரிய போர்க்குரிய பூவை பெறுமாறு சான்றோர் ஒருவர் கூறுகின்றார். புலையன் போர் தொடங்குதற்குரிய தண்ணுமை எனும் போர் இசையை இசைப்பான் அதைக் கேட்பாய் எனப் பாணனிடத்துக் கூறும் பாடல் காணப்படுகிறது. “உண்டாட்டு நிகழ்த்துதல் வேந்தன் மரபு” (பக். 180 - 181 புறம்) படைக்களன்கள் தருவதும், வேற்றுப்படை வரவை முரசறைந்து தெரிவிக்க, தன்

 Isbn Number: 978-93-91115-47-0

படைகளுக்கும் அறிவித்த செய்திகளைக் காணலாம். “முரசுக்குத் தோலை மயிர் சீவாது போர்த்தல் மரபு” (பக். 177, புறம்) பண்டைய காலத்தில் அரசனே ‘நாட்டைப் பாதுகாக்கும்’ தகுதியுடையவனாகக் கருதப்பட்டுள்ளான். மேலும், அரசனே படைப் பொருட்களைச் சிலரிடம் கொடுத்த செய்திகளைத் தொல்காப்பியம் குறிப்பிடும்.

போர்க் காலத்தில் மறவர்க்கு ஊன்சோறு தருவதும் வழக்கமாக இருந்துள்ளது. அரசன், மறவனென இருவருக்கும் ஒரே வகையான சோறு இடுதல் மரபாக இருந்துள்ளது.

“ஊன் துடி அடிசில் - ஊனும் அரிசியும் குலைய சமைத்த புலவு” (பக். 155, பதிற்றுப்பத்து, புலியூர்கேசிகன் உரை) என்று குறிப்பிடுவதைக் காணலாம். அதே ‘கள்’ வழங்கும் பழக்கம் இருந்துள்ளது. இதனை தொல்காப்பியர் ‘உண்டாட்டு’ என்கிறார். அதாவது வெட்சித்திணையில் போர் முடிவுற்ற காலத்தில் ஆநிரைகளை கவர்ந்து வந்தோர் பங்கிட்டுக் கொண்டு உண்டாட்டு (அதாவது மது குடித்தல்) நிகழ்த்துதல் மரபாக இருந்துள்ளது. ஆனால் பதிற்றுப்பத்து போருக்குச் செல்லும் முன் சேர அரசர் மறவர்களின் தகுதி அறிந்து ‘கள்’ வழங்குவதை பாடல்கள் உணர்த்துகின்றன.

போரில் விழுப்புண்ணோடு இறப்பதே பெருமையென எண்ணினர். அதனால் இறந்தே குழந்தை

 Isbn Number: 978-93-91115-47-0

பிறந்தால் கூட வாளால் கீறியே புதைப்பதை வழக்கமாகக் கொண்டதை,

குழவர் இறப்பினும் ஊன் தடி பிறப்பினும்

ஆள் அன்று என்று வாளில் தப்பார் (புறம். பா. 74)

என்று குறிப்பிடப்பட்டதும், போரிடாதோரை இழிவாகக் கருதியதையும், அவர்களையும் மார்பில் கீறி புதைத்ததையும்,

நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇ

காதல் மறந்து அவர்தீது மருங்கு அறுமார்

…. மறம் கந்தாக நல்வுமர் வீழ்ந்த

நீள்கமழ் மறவர் செல்வழிச் செல்க என

வாள்போந்து அடக்கலும் உய்த்தனர் (புறம். பா. 93) என்று புறப்பாடல் எடுத்துரைக்கிறது. போரில் இறந்தவர்களுக்கு 'நடுகல்' நட்டு வழிபடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். "காட்சி, கால்கோள், நீர்படை, நடுகல்" (தொல். பொருள் நூ. 63) குறிப்பிடுகிறது.

வீரம்

ஒக்கூர் மாசாத்தியார் புறநானூற்றுப் பாடலில் படைத்துள்ள இவ்வீரத்தாய்க்கு நிகரான மனத் திண்மையும் துணிவும் கொண்ட தாய் ஒருத்தியை ரஷ்ய நாட்டு வரலாற்றிலும் காணமுடிகின்றது. அத்தாயினைப் பற்றிய ஓர் அரிய நிகழ்ச்சிக் குறிப்பு வருமாறு:

 Isbn Number: 978-93-91115-47-0

“ரஷ்யப்புரட்சி கொழுந்துவிட்டு எரிந்த காலம் அது... மக்கள் எல்லாம் அரசுக்கு எதிராக அணி வகுப்பதாகக் கருதிய ஜார் மன்னன், மக்களுக்கு எதிராகப் படையைக் கோர தாண்டவம் ஆட அனுமதித்தான். படையினர் தங்கள் சந்தேகத்திற்கு உரியவர்கள் மீது அராஜக வெறியைக் கட்டவிழ்த்து விட்டனர்.

ஒரு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அரசுக்கு எதிராகச் செயல்படுவதாகக் கூறி அந்தக் கிராம மக்களை ஒட்டுமொத்தமாகக் கொன்று குவிக்கப் படை கிளம்பியது. கிராம மக்களுக்குச் செய்தி எட்டியது. கூண்டோடு ஊரைக் காலி செய்த மக்கள் அருகே உள்ள அடர்ந்த காட்டில் தஞ்சம் புகுந்தனர். படை அங்கேயும் பின்தொடர்ந்து தேடுதல் வேட்டையில் இறங்கியது. அந்தக் கிராமவாசிகளில் கைக்குழந்தைக்காரியும் ஒருத்தி, தன் குழந்தையை மார்போடு அணைத்தவாறு ஒளிந்திருந்தாள்.

ஒரு கட்டத்தில் அந்தக் கைக்குழந்தை வீறிட்டு அழ எத்தனித்தது. குழந்தை ஓங்கி அழுதுவிட்டால் அடுத்த கணம் தேடுதல் வேட்டையில் இறங்கியிருக்கும் படை வீரர்கள் அந்தக் கிராம மக்களைச் சூழ்ந்து விடுவார்கள். அந்தப் பெண்ணுக்குத் தன்னால் தனது கிராம மக்கள் மாட்டிக் கொண்டு மரணத்தை ஏற்றுத் துயரில் மடிவதை ஏற்க முடியவில்லை. எனவே,

Isbn Number: 978-93-91115-47-0

அழப்போகிற குழந்தையின் வாயைத் தன் கையினால் பொத்தி அழுகுரல் வெளியே கேட்க முடியாதவாறு செய்கிறாள். குழந்தை மூச்சுத் திணறி திமிறுகிறது. அந்தத் தாயும் தனது பிடியைத் தளர்த்தாமல் குழந்தை வாயை அழுத்திக் கொண்டிருக்கிறாள்.

பத்து நிமிடம் கழிந்திருக்கும். படை வீரர்கள் அந்தப் பகுதியை விட்டு வேறோர் இடத்தில் தேடுதல் வேட்டைக்குக் கிளம்புகிறார்கள். பயம் தெளியாத சூழ்நிலையில் அந்தப் பெண் தன் குழந்தை வாயில் இருந்து கையை எடுத்தாள். குழந்தை கத்தாமல் அடக்க நினைத்துக் குழந்தை மூச்சையே அமுக்கிவிட்டது அப்போதுதான் தெரியவருகிறது. சுற்றுமுற்றும் சூழ உள்ளவர்கள் பதறுகிறார்கள். அந்தத் தாயோ தன் குழந்தை தன் கிராமத்தைக் காப்பாற்றித் தருகிற தியாகத்தைச் செய்ததாக எண்ணுகிறாள் ”

ரஷ்யத்தாயின் இந்த அரும்பெருந் தியாகச் செயலைப் பயிலும் எவருக்கும் ஒக்கூர் மாசாத்தியாரின் மொழியில், கெடுக சிந்தை, கடிதுஇவள் துணிவே! என்று வியந்து பாராட்டவே தோன்றும்!

போரில் நிகழும் நிகழ்வுகள்

போரின் தொடக்கத்தில் வெற்றிக் காண வேண்டும் எனச் சூளுரைத்தல் இயல்பாக இருந்தது. வெட்சித்திணையில் சிவந்த வாயுடைய வேலனை

Isbn Number: 978-93-91115-47-0

எண்ணியும், வள்ளியை எண்ணி கூத்து நிகழ்த்துதலும் நடந்துள்ளது. அதே போல, அரசன் பகைநாட்டின் மீது படையெடுக்கும் முன்பு குடையையும், வாளையும் நல்லநாளில் முன்கூட்டி அனுப்பி வைப்பது வழக்கமாக இருந்தது. இது விழாவாக "குடையும் வாளும் நாள்கோள்", (தொல். நூ. 1014) என்று உழிஞையில் (மருத நிலம்) குறிப்பிடப்பட்டுள்ளது. இம்முறை வயலும், வயல் சார்ந்த நிலப்பகுதியில் பின்பற்றப்பட்டிருக்கிறது என கொள்ளலாம்.

அத்திணையிலேயே போருக்குச் செல்லும் கரந்தை வீரர்கள் உன்ன நிமித்தம் பார்த்ததாகக் குறிப்புக் காணப்படுகிறது. உன்னம் - ஒருவகை மரம்; அது நல்லதாயின் தளிர்த்தும் - தீயதாயின் உதிர்ந்தும் காணப்படும் (பக். தொல். தி.சு.பா.) என்பர். இது மரபாக இருந்திருக்கிறது. "உன்ன மரம்... உன்னம் வாடித் தோன்றினாலும் பொருட்படுத்தாது சென்று வெற்றி பெற்றுத் திரும்பும் ஆற்றலைப் "பாரி" பெற்றிருந்தான். செல்வக் கடுங்கோ வாழியாதனும் அத்தகைய தகுதியையே யுடையவன் என்று புலவர் புகழ்வதுண்டு.

"பொன்னின் அன்ன பூவின் சிறியிலைப் புன்கால் உன்னத்துப் பகைவன் எம்கோ என்று கபிலர் வாழியாதனை பாரட்டுவார். இருவரும் மலைசார்ந்த பகுதியிலேயே ஆட்சி புரிந்துள்ளனர். ஆக, மலைப்

 Isbn Number: 978-93-91115-47-0

பகுதியிலே இம்மரபு இருந்திருந்தது எனலாம். மேலும், வெட்சிப் படையினர் எதிர் படையினர் அறியாதவாறு ஒற்றர்கள் மூலம் தகவலறிந்து தீங்கிழைக்காது ஆநிரைகளைக் கவர்ந்த செய்தி தொல்காப்பியத்துள் காணலாம். பகிர்ந்து கொள்ளுதலும், உண்பித்து மகிழ்தலும் இந்நிலத்திலேயே காட்டப்பட்டுள்ளது. குளிர், பனி எனப் பாராமல் போர்க்களத்தில் புண்பட்ட மறவர்களை நள்ளிரவில் கண்துயிலாது மன்னன் அவர்களைக் கண்டு ஆறுதல் படுத்துதல் வழக்கமாகக் கொண்டான். இதனை நெடுநல்வாடை நூல் குறிப்பிடும். போரில் பெரும்புண்பட்டு வீழ்ந்த மறவர்க்கு மருத்துவம் செய்யும் முறையும், விறலியர் ஆடி பாடி மகிழ்விப்பதும் உண்டு. போரில் தன் சிறுவயது மகன் களிற்றைக் கொன்று தானும் இறந்தானெனக் கேட்ட முதிய தாய் மகிழ்ந்தாள். அது ஈன்ற பொழுதினில் அடைந்த இன்பத்தை விடவும் பெரியது என்கிறாள்.

காக்கை பாடினியாரின் 278ஆம் பாடல் புறப்பாடலுள் வீரத்தின் முழுமை புரியும். "இளமறவன் ஒருவன் போரில் இறந்தான். அவன் உடல் துண்டு துண்டாகி தனித்தனியே கிடக்கிறது. அதனைக் கண்டோர், போர் முடிவில் ஊருக்குச் செல்ல, அங்குள்ள அவன் தாயிடம், 'உன் மகன் புறமுதுகு காட்டி இறந்தான்' எனக் கூறினர். கோபமடைந்த அவளோ! மறக்குடி

Isbn Number: 978-93-91115-47-0

மாண்புக்கு இழுக்கு இது. கண்களை தீயென திறந்து நோக்கி, என் மகன் இவ்வாறு இறந்தானாயின் ‘அவன் வாய் வைத்து உண்ட என் மார்பை அறுத்தெறிவேன்’ என வஞ்சி’னம் கூறி.

கைவாள் ஒன்றை எடுத்துப் போர்க்களம் செல்கிறாள். அங்கே மறவர் பிணங்கள் மலிந்து மிகுந்து கிடக்கிறது. பிணங்களைப் புரட்டிப் பார்க்கிறாள். முடிவில் ஓரிடத்தில் தன் மகனைப் பார்க்கிறாள். அதிலும் அவன் மார்பிலே வேல் தாங்கி இருப்பதைப் பார்க்கிறாள். பெற்ற நாளினும் பேருவகை கொள்கிறாள் என் மகன் கோழை அல்லன். மார்பிலே விழுப்புண் பட்டிருக்கின்றான் என்று கண்ணீர் துடைத்துக் கவலைத்துறந்தாள். உடல் துண்டங்களை ஒன்றாய் இணைத்து பார்க்கிறான். அவள் கோபம் தணிகிறது. குடிப்பெருமையைகாத்தான் என மகிழ்ச்சி தோன்றுகிறது.

மறக்குடி மகளிரின் சிறப்பையும் வீரத்தின் தனித்தன்மையையும் உணர்த்தும் பல பாடல்களைப் புறநானூற்றில் காண முடியும்.

போருக்குப் பின் நிகழ்ந்தவை

பதிற்றுப்பத்தில் சேர மன்னன் ஒருவன் எதிர்மன்னனை வீழ்த்துகிறான். பின்னர் எதிர்நாட்டிலுள்ள பெண்களின் கூந்தலை அறுத்து,

 Isbn Number: 978-93-91115-47-0

அதனை கயிறாகத் திரித்து யானையைக் கட்டி இழுத்து வந்தானெ சங்க இலக்கியப் பாடல் உணர்த்துகிறது.

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்... (புறம். பா.74) பாடலின் கண் சேரமான் கைது செய்யப்படுகிறான். அவன் நீர் தாகத்தால் நீர் கேட்க தர மறுக்கின்றனர். உணவும் தராமல் கொடுமைபடுத்த பசி பொறுக்காது வயிறு தீப்போல இருந்தது என்றும், உணவு தராமல் இருந்ததையும், நடத்தப்பட்ட முறையையும், “தொடர்படு ஞமிலியின் இடர்படுத்து (ஞமலி - நாய்) என்று நாய் போலத் தொடர்ந்து இடர்படுத்தப்பட்டுக் கணைக்காமல் இரும்பொறை உண்ணாது மானத்தோடு இறந்தான் என இலக்கியப் பதிவில் சுட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் தோற்றுப் போன மன்னனைச் சிறையிலிடும் பழக்கம் இருந்ததை அறிகிறோம்.தோற்றுப் போனவனின் ‘பல்’லினைப் பிடுங்கி அதனை வாயிற் கதவில் வைத்தான் சேரன் என்று பாடல் - விளக்குகின்றது.

போரில் புறப்புண்பட்டதெனவும், தம்மை இழிவாகப் பிறர் கருதுவரெனவும் எண்ணி போர்க்களத்திலேயே மாய்த்துக் கொண்டதையும், சிலர் வடக்கிருந்து உயிர் துறத்தலையும் அறிய முடிகிறது.

போரில் நிகழும் கொடுமையான நிகழ்வுகள்:-

 Isbn Number: 978-93-91115-47-0

வெட்சியை (மலை) பொறுத்தமட்டில் பகைவர் அரணை அழித்தும், ஆநிரைகளைக் கைப்பற்றும் போது எதிர் படை மறவர்களை கொன்று குவிப்பதுண்டு. வஞ்சி (சமவெளி) பொருத்த வரையில் வஞ்சி வேந்தன் பகை நாட்டினை தீ வைத்து கொளுத்துவான். இதனைக் 'உழபுலவஞ்சி' என்பர். முன்னர் தீயிட்டுக் கொளுத்திய அரசனின் வேகம் தணியாது மீண்டும் நாட்டைத் தீயிட்டு கொளுத்துவதுண்டு. இதனை 'பெருங்காஞ்சி' என்பர்.

காஞ்சித் திணை (கடல், சார் பகுதி)யில் புண்பட்ட தலைவனை எண்ணி தம் மார்போடு தழுவிக் கொண்டு தானும் இறப்பாள். மேலும் போரில் ஈடுபட்ட தன் கணவனின் மார்பிலிருந்த வேலை எடுத்து தன்னுயிரையும் போக்கிக் கொள்வாள். உழிஞையில் மன்னன் சினம் அடங்காது அரண்களையும் கோட்டைகளையும், அழகிய அரண்மனைகளையும் இடிப்பதுண்டு. தும்பையைப் பொருத்தமட்டில் பெரும்போரில் இரு வேந்தர்களும் மடிவதுண்டு. இதைப்போல பலநூறு நிகழ்வுகளைத் தொல்காப்பியம் புறப்பொருள் வெண்பாமாலை எடுத்துரைக்கிறது.

பார்ப்பார் அறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டு
தீத்திறத்தார் பக்கமேசேர்க (சிலம்பு பா.21:53-55)

 Isbn Number: 978-93-91115-47-0

என்று கூறுவதன் வழியாகவும், பார்ப்பனர், பசு, அறவோர், பத்தினிப் பெண்டிர், நோயுடையீர், மூத்தோர், குழந்தை - ஆகியோர் போரில் ஈடுபடவில்லை என்று உணர முடிகிறது. பல்வேறு போர்களைப் பற்றித் தெளிவுற குறிப்பிடும் தொல்காப்பியத்தில் இச்செய்தி காணவில்லை. சுவடிகள் அழிந்திருக்கலாம்.

ஒரு மன்னன் நாட்டைப் பாதுகாத்தலுக்கு படையே முதன்மையாய் விளங்குகின்றது. பண்டைக் காலத்தில் தானை, யானை, குதிரை ஆகிய மூவகைப் படைகள் இருந்தன. தேர்ப்படையைப் பற்றி சங்க இலக்கியத்தில் ஒருபாடலில்குறிப்பிடப்பட்டுள்ளது. தொல்காப்பியத்துள், "தானை யானை குதிரை என்ற / நோனார் உட்கும் மூவகை நிலையும்" (தொல். நூ. 1018 : வரி : 1-2) என்று 3 படைகள் இருந்ததை நெய்தல் திணையில் மட்டும் (கடல் சார் பகுதி) குறிப்பிடுகின்றார். குறிப்பாக வலிமைக் கருதி இருபெரும் வேந்தரும் பெரும்போர் நிகழ்த்தியிருக்கலாம். இப்போரே மற்ற போர்களை விடவும் பெரும்போராக இருந்திருக்கலாம். போர்க்களத்தில் மறவனின் உடல் பகைவரால் செலுத்தப்பட்ட அம்புகளாலும், வேல்களாலும் உயிர்நீங்கிய உடம்பு நிலத்தில் விழாமல், அறுக்கப்பெற்ற 'அட்டைகள்' போன்று தலையும், உடல் உறுப்புகளும் துடித்துதுடித்து ஆடும் ஒப்பற்ற தன்மையுடையது என்று

 Isbn Number: 978-93-91115-47-0

தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அதே போல தன் மன்னன் இறந்தான் எனக் கேள்வியுற்று பலரையும் வெட்டி வீழ்த்தும் மறவனின் சிறப்பும் நெய்தலிலேயே,

செருவகத்து இறைவன் வீழ்வுற சினைஇ

ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்

(தொல். நூ. 1018) என்று குறிப்பிடப்படுகிறது. ஆகவே போர்களில் இந்நிலத்திலேயே வலிமையின் பொருட்டு அனைத்துப் படைகளையும், படைக்களன்களையும் எதிரெதிரே நிறுத்தி மகாபாரதப் போர் போல நிகழ்த்தியதை உணர முடிகிறது.

யானையின் துதிக்கையை மறவன் ஒருவன் தம் வாளால் வெட்டுகின்றான். அதனால் யானையின் துதிக்கையிலிருந்து குருதி வடிகிறது. அது பார்ப்பதற்கு ஒரு பையில் இருந்து பவளம் கொட்டுவது போன்று இருந்தது எனப் பொய்கையார் உவமிக்கிறார். எனின் இக்காட்சி வன்மமாய் உள்ளது. இது போன்ற பல காட்சிகளை இலக்கியங்களுள் காண முடிகிறது.

முடிவுரை

புறநானூற்றில் அன்றைய தமிழ்மக்களின் போருக்கான காரணங்கள், போர்க்கருவிகள், நால்வகைப் படைகள், போர் நெறிமுறைகள் ஆகியன காணலாம். மேலும் போரினால் ஏற்படும் துன்பத்தின் நிலை,

Isbn Number: 978-93-91115-47-0

பெண்களின், பிற உயிர்களின் நிலை பற்றியும் இங்கு காணமுடிகிறது. போருக்குப்பின் மகனைத் தாய் இழப்பாள், பெண்தலைவனை இழப்பாள், கணவனை இழக்கும் பெண்ணின் கதைசோகம், கணவனின் உடலைத் தாழியுடன் வைத்து புதைப்பர். புதை குழிக்கு மேல் கல் எடுப்பர். இதுவே நடுகல் எனப்படும். மண்ணிற்காகவும், பொன்னிற்காகவும் ஓயாது போரிட்டுக் கொண்டிருந்த மன்னர்களை ஒற்றுமைப்படுத்தும் ஆசையும் புலவர்களுக்கு அக்காலத்தில் இருந்ததையும் அறியமுடிகிறது. இவ்வாறு புறநானூற்று வாயிலாக தமிழர்களின் போர்நெறிமுறைகளையும் வீரத்தையும் மாண்பையும் அறிய முடிகிறது.

பயன்பட்ட நூல்கள்

[1] சாமிநாத ஐயர் உ.வே.(ப.ஆ). *புறநானூறு*. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 1988.

[2] தமிழண்ணல், *புறநானூற்றுக்குறும்படங்கள்*. மீனாட்சி புத்தகநிலையம், மதுரை-1, 2009.

[3] சாலமன் பாப்பையா. *புறநானூறு புதிய வரிசை வகை*. கவிதா பப்ளிகேசன், சென்னை, 2019.

 Isbn Number: 978-93-91115-47-0

[4] பேராசிரியர் இரா. மோகன். *பன்முகநோக்கில் புறநானூறு*. வானதி பதிப்பகம், 2017.

[5] தமிழ்வேலு, அ. *களவழி களமும் காலமும்*. தென் பண்ணைப் பதிப்பகம், தென்னாற்காடு, 1997.

 Isbn Number: 978-93-91115-47-0

Puranaanoorum Vanchithinai Porum

Dr Kr.Samathuvam, Assistant Professor of Tamil,
Ananda College, Devakottai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-6299-9727
DOI: 10.5281/zenodo.5598459

Abstract

In classical Tamil literature, heroism is considered to be the foremost virtue and is revealed in the four hundred songs of Puranaanooru. Puranaanooru *conveys that the kings are very brave and heroic. During the Sangam Period, the origin of heroism, people considered it a great privilege to be involved in the war. They considered war to be a noble profession and waited for war. In that sense, the poets have explained the events of the Sangam period wars. The king with the quest for fame and greed is engaged in the task of enslaving and intimidating another country. In the list of the* Puranaanooru *Kings, a battle takes place after the war to capture Aniruddha and was followed up with various tactics. There are thirteen songs about the war found in the* Puranaanooru. *They are sung in the four fields of 'Kotra Vallai' (4, 7, 41, 98, 100), 'Thunai Vanchi' (36, 45, 46, 47, 57, 213), 'Mazha Pula Vanchi' (16) and 'Perunchotru Nilai' (292). The wars fought by the Cheras, Cholas and Pandyas are depicted in these songs. Involuntary manoeuvres, not only kings but also warriors, have acquired the ability to go ahead and wait*

for the battlefield, such as engaging in timeless warfare and appearing to be warlike tradition and culture. Many poets sang about the events of the treacherous wars of plundering the enemy country, plundering the resources and destroying the lands - sang the praises of the war and asked the kings to give up the war to set up peace.

Keywords: Puranaanooru, Vanchith thinaip porkkalam**,** Virtue of war**.**

References

[1] Ramakritinan A. *Tamizhaka Varalarum Tamizhar Panbaadum*, Sarvothaya Elakkiya pannai, Madurai, 2012.

[2] Elangumaran Era. (ou.a), *Purananooru*, Koviloor Madaalayam, Koviloor, Karaikudi, 2003.

[3] Shanmugam Pillai Mu, (Pa.a), *Tholkappiyam Porulathikaram(1), Elambooranam*, Mullai Nilaiyam, Chennai, 1995.

[4] Subramanyan Na, *Sanga Kaala Vazhalviyal*, New Centuari Book House, Chennai, 2017.

[5] Sedhupillai Ra.p, *Tamizhar Veeram*, Palaniyappa Brothers, Chennai, 1981.

[6] Sedhuraman Ku, *Tamizhaka Samuthaya Panpaattu Kalai Varalaru*, New Century Book House Chennai, 2018.

[7] Parimanam A.ma, Balasubramaniyan Ku.Ve, (Pa.A),

Purananooru Mulamum Uraiyum Book 2, New Centuari Book House Chennai,

[8] LenaTamizhVaanan, *Pazhantamizhar Panpaadum Naagaregamum*, Manimegalai Prasuram, Chennai, 1982

Isbn Number: 978-93-91115-47-0

புறநானூறும் வஞ்சித்திணைப் போரும்

முனைவர் கரு. சமத்துவம், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஆனந்தாகல்லூரி, தேவகோட்டை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-6299-9727
DOI: 10.5281/zenodo.5598459

ஆய்வுச்சுருக்கம்

செவ்வியல் இலக்கியங்களுள் சங்க கால மக்களின் புற வாழ்க்கையினை விவரிப்பது புறநானூறு. புறக்கூறுகளுள் வீரம் முதன்மையாகக் கருதப்படுகின்றது. தறுகண்மையும், வீரமும் மிக்கவனாக ஆண்மகன் திகழ்ந்தான் என்பதைப் பகரும் வகையில் அமைந்தது புறநானூறு. வீரத்தின் தோற்றுவாயான சங்க காலத்தில் மக்கள் தம்மைப் போரில் ஈடுபடுத்திக் கொள்வதனைப் பெரும் பேறாகக் கருதினர். போர் செய்தலைத் தொழிலாக எண்ணிப் போருக்காகக் காத்திருந்தான் வேந்தன். அந்த வகையில் சங்க காலப் போர்க்களச் செய்திகளைப் புலவர்கள் புறநானூற்றில் தெளிவுபடுத்தியுள்ளனர். `

புகழ் வேட்கையும் மண்ணாசையும் கொண்ட மனிதன், பகைவரைப் பணிய வைக்கவும் அச்சமூட்டவும் போரில் ஈடுபடுகின்றான். பல்வேறு உத்திகளைப் பின்பற்றிய போர்ச் செயல்களுள் ஆநிரை கவர்தலுக்குரிய வெட்சிப்போருக்கு அடுத்ததாக நிகழ்வது வஞ்சித் திணைப் போராகும்.

 Isbn Number: 978-93-91115-47-0

மண்மீது கொண்ட வேட்கை காரணமாகப் போரிடுவது வஞ்சிப் போராகும். இப்போர் குறித்துப் பதின்மூன்று பாடல்கள் புறநானூற்றில் காணப் படுகின்றன. அவை கொற்றவள்ளை (4, 7, 41, 98, 100), துணைவஞ்சி (36, 45, 46, 47, 57, 213), மழபுலவஞ்சி(16), பெருஞ்சோற்று நிலை (292) ஆகிய நான்கு துறைகளில் பாடப்பெற்றுள்ளன. சேர, சோழ, பாண்டியர்கள் செய்த போர்கள் இப்பாடல்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. காலம் பாராது போரில் ஈடுபடுதல், போர்க் கோலப் புனைவுடன் தோற்றமளித்தல் ஆகியவற்றை வேந்தனது புறச்செயல்களில் குறித்துச் செல்லும்புலவர்கள், மன்னர்கள் மட்டுமின்றிப் படை வீரர்களும் முந்திச் சென்று போர் புரியக் காத்திருக்கும் திறனையும் எடுத்தாண்டுள்ளனர்.

பகைவர் நாட்டை எரியூட்டுதல், வளத்தினைக் கொள்ளையடித்தல், நீர்நிலைகளை அழித்தல் ஆகிய வஞ்சித் திணைப் போர்க்கள நிகழ்வுகளைப் பாடிய புலவர்கள் - போர் அழிவுகளை எண்ணி, போரைக் கைவிடுமாறு மன்னர்களிடம் வேண்டுவதாகவும் பாடியுள்ளனர். மண்ணாசைப் போராயினும், மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளுமாறு மன்னர்களை அறிவுறுத்துவதும் புலவர்களின் நோக்கமாகும்

 Isbn Number: 978-93-91115-47-0

கலைச்சொற்கள்: புறநானூறு, வஞ்சித்திணைப் போர்க்களம், போர் அறம்,

முன்னுரை

மக்களின் வாழ்வியல் அகம், புறம் என்ற இரண்டையும் அடிப்படையாகக் கொண்டமைந்தது. இதனைப் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன, காதலும்வீரமும் ஒருங்கமைந்த சங்கத் தமிழரின் வாழ்வியலைச் செவ்வியல் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. ஆண்மகன் தன் காதல் இன்பத்தினும் வீரப் போர் புரிதலைப் பெரிதாக எண்ணியதனை, ‘களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே‘ (புறம்.312:6)என்ற கூற்று புலப்படுத்தும். வீரயுகக் காலம் என்றழைக்கப்படும் சங்ககாலம் மன்னனின் போர்த் திறனை - வல்லமையை – படைபலத்தை உணர்த்துவதாகும். தமிழன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வீரப்போர்க்களம் காண்பதில் பேராற்றலும் நுண்ணறிவும் படைத்தவனாகத் திகழ்ந்தமை புற இலக்கண, இலக்கியங்களால் புலனாகின்றது. வரலாற்றுச் சிறப்புமிக்க போர்கள் பலவற்றைச் சங்க இலக்கியம் விரிவாக எடுத்துரைக்கின்றது. போரியல் நடைமுறைகளுள் வஞ்சித் திணை சார்ந்த போர்க்கள

Isbn Number: 978-93-91115-47-0

நிகழ்வுகளைப் புறநானூற்றுப் பாடல்களைக் கொண்டு விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பிய மரபும் மாற்றமும்

தொல்காப்பியத்தின் புறத்திணையியல் போரியல் நடைமுறைகளைத் தொகுத்து உரைக்கின்றது. இதில் போருக்கான காரணங்கள், போர் நடைபெறும் முறை, போரின் பின் விளைவுகள் ஆகியவை ஆராய்ந்து கூறப்பெற்றுள்ளன. மனிதனுக்கு இயல்பாக இருக்கும் போர்க்குணம் போரைத் தூண்டியிருப்பினும், மண்ணாசை, மகட்கொடை மறுத்தல், துறக்கச் சிந்தனை, புகழ் வேட்கை போன்றவையும் போர்உண்டாகும் சூழலை ஏற்படுத்தியுள்ளன. இவற்றுள் போரிட்டு நாடுபிடிக்கும் செயல் மன்னர்களால் பெரிதும் விரும்பப்பட்டது. அதனைத் தொல்காப்பியம் வெட்சித் திணைக்கு அடுத்ததாக வஞ்சித் திணையில் வகுத்துக் கூறியுள்ளது.

வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத்தலைச்சென்று அடல்குறித்தன்றே
(தொல்.புறத்.6)

என்பது நூற்பா. இதற்கு உரைவரைந்த இளம்பூரணர்,

அஃது ஒழியாத மண்ணை நச்சுதலையுடைய வேந்தனை மற்றொரு வேந்தன் அஞ்சுதகத் தலைச்

Isbn Number: 978-93-91115-47-0

சென்று அடல்குறித்தது. ஒழியாத மண்ணை நச்சுதலாவது வேண்டிய அரசர்க்குக் கொடாமை(தொல்காப்பியம் பொருளதிகாரம் (1) இளம்பூரணர்உரை,ப.100)

என்று குறிப்பிட்டுள்ளார்.தான்விரும்பியநிலப்பரப்பு கிடைக்காத போது வேந்தன், அதனைப் போரிட்டுப் பெற்றுக் கொள்வது சங்க கால மரபு.

பிறனாளும் நாடு ஊக்கல் மன்னர் தொழில் நலம் (நான்மணிக்கடிகை.85:2:3) என்ற கூற்று இதற்கு அரண் சேர்க்கும். இயல்பாக மாந்தரிடம் இருக்கக்கூடிய போர்க்குணம் மன்னர்களிடம் மிகுந்திருப்பதனை இலக்கியங்களும், செப்பேடுகளும் கல்வெட்டுகளும் உணர்த்துகின்றன. பிற நாட்டின் மீது படையெடுப்பதற்கு மண் மீது கொண்ட ஆசையே முதற்காரணமாகும்.சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதனை,

வையம் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாஅது
இடஞ்சிறிது என்னும் ஊக்கம் துரப்ப
ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகை
கடந்தடு தானைச் சேரலாதனை (புறம்.8:1:5)

என்று கபிலர் பாராட்டியுள்ளார். இம்மண்ணுலகம் மண்ணுயிர்கள் அனைத்திற்கும் உரிமைத்து என்ற பொதுச் சொல்லைப் பொறுத்துக்கொள்ளாமல் தனது

Isbn Number: 978-93-91115-47-0

சிறிய நாட்டைப் பெரிதாக்கிய படை வலிமையுடையவன் என்பதனால் மண் நசை வேந்தனுக்குரியது என்பது தெளிவாகின்றது.

சங்க காலத் தமிழகத்தில் போர்கள் மிக அடிக்கடி நிகழ்ந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. குறிப்பாகப் புறப்பொருள் சார்ந்த இலக்கியங்கள் போர்கள் பற்றிய விபரங்களைத் தருகின்றன. பண்டைத் தமிழர்கள் போரூக்கம் கொண்டு வீரப்போர் புரிதலில் அதிக ஆர்வம் காட்டினர். வீரத்தின் பயனான புகழினை அவர்கள் தங்கள் வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டிருந்தனர். (தமிழகச் சமுதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு, முனைவர் கு. சேதுராமன். ப. 33)

வஞ்சித்திணைக்குரிய போர் மரபுகளைத் தொல்காப்பியர் பதின்மூன்று துறைகளில்தெளிவுபடுத்தியுள்ளார்.

இயங்குபடைஅரவம் எரிபரந்தெடுத்தல்
வயங்கல் எய்திய பெருமை யானும்
கொடுத்தல் எய்திய கொடைமை யானும்
அடுத்தூர்ந்து அட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழியானும்
பொருள் இன்று உய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமையானும்

Isbn Number: 978-93-91115-47-0

பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்
வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
அழிபடைதட்டோர்தழிஞ்சியொடுதொகைஇக்
கழிபெருஞ் சிறப்பின் துறைபதின் மூன்றே
(தொல். புறத். 7)

என்பது தொல்காப்பியம். இம்மரபுகள் பிற்காலத்தில் மாற்றம் பெற்றுள்ளமையினைப் புறப்பொருள் வெண்பாமாலை இலக்கணம் உணர்த்துகின்றது. இதில் இருபது துறைகள் இடம் பெற்றுள்ளன. அவை,

வாடாவஞ்சி வஞ்சி அரவம்
கூடார்ப் பிணிக்கும் குடைநிலை வாள்நிலை
கொற்றவை நிலையே கொற்ற வஞ்சி
குற்றமில் சிறப்பின் கொற்றவள்ளை
பேராண் வஞ்சி மாராய வஞ்சி
நெடுமொழி வஞ்சி முதுமொழி வஞ்சி
உழபுல வஞ்சி மழபுல வஞ்சி
கொடையின் வஞ்சி குறுவஞ் சிய்யே
பெருவஞ் சிய்யே பெருஞ்சோற்று நிலையொடு
நல்லிசை வஞ்சியென நாட்டினர் தொகுத்த
எஞ்சாச் சீர்த்தி யிருபத் தொன்றும்
வஞ்சியும் வஞ்சித் துறையு மாகும்
(புறப்.வெ.மா.வஞ்சிப்படலம்.நூ. எண்.3)

 Isbn Number: 978-93-91115-47-0

என்பனவாகும். சங்கஇலக்கிய நடைமுறைகளுக்கேற்பத் தொல்காப்பிய உரையாசிரியர்களும் கூடுதலான துறைக்குறிப்புகளை எடுத்தாண்டுள்ளனர்.

புறநானூறும் வஞ்சித் திணையும்

குடிமக்களை ஒருங்கிணைத்துப் பாடும் புறநானூற்றில் வஞ்சித்திணைப் பாடல்கள் நான்கு துறைகளில் பாடப்பெற்றுள்ளன. அவை கொற்றவள்ளை (4, 7, 41, 98, 100), துணை வஞ்சி (36, 45, 46, 47, 57, 213),மழபுலவஞ்சி(16),பெருஞ்சோற்றுநிலை(292)ஆகிய வைகளாகும்.

> **வெட்சி, கரந்தைப் பாடல்களில் தனிப்பட்ட படை அமைப்புப் பற்றிய குறிப்பு இல்லை.முறைவைத்து வீரர்களைப் போர்க்குஅனுப்புதல், பாசறைகளில் தங்கிச் சென்று போரிடுதல் போன்ற செய்திகள் வஞ்சிப்பாடல்களிலே முதன் முதலில் குறிப்பிடப்படுகின்றன" (தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், டாக்டர் ஆ.இராமகிருட்டினன், ப.114)**

என்ற கருத்து வஞ்சித்திணைப் பாக்களின் போக்கினைப் பகர்கின்றது.]

சோழர்குலத்தவரின் போர்த்திறனைப் பற்றி ஒன்பது பாடல்களும்(புறம். 4, 7, 16, 36, 41, 45, 46, 47, 213) பாண்டிய மரபினரின் வீரவுணர்வைக் குறித்து ஒரு பாடலும் (57) அதியனின் களப்போரினை இரண்டு

Isbn Number: 978-93-91115-47-0

பாடல்களும் (98, 100) போர்ப்படையினை முன்னின்று திறம்படச்செலுத்தும் வீரனுக்காகஒருபாடலும்(292)என்ற முறையில் வஞ்சித் திணைப் பாக்கள் இடம் பெற்றுள்ளன. அதியனைக் குறித்த இரண்டு பாடல்களையும் வஞ்சித் திணைக்கு மட்டுமின்றி வாகைத்திணைக்கு உாியதாகவும் உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இப்பாடல்கள் இருதிணைக் கருத்துகளுக்கும் பொருந்தி வருவதால் அங்ஙனம் உரை வரைந்துள்ளனர். புறநானூற்று வஞ்சித் திணைப்பாடல்கள் எண்ணிக்கை குறைந்திருப்பினும் (13) தமிழர்தம் வீரத்தினைப் பறைசாற்றுவதில் சிறப்பிடம் பெறுகின்றன.

வஞ்சித் துறையும் பொருண்மையும்

புறநானூற்றில் பாடப்பெற்றுள்ள வஞ்சித் துறைகளுள் கொற்றவள்ளை, பெருஞ்சோற்று நிலை ஆகிய இரண்டும் தொல்காப்பியத்தில் சுட்டப் பெறுகின்றன. பாட்டுடைத் தலைவன் புகழ்ப்பாடி, பகைவர் நாடு அவனால் அழிதற்கு வருந்திப் பாடுவது கொற்றவள்ளையாகும்.

> **குறைவுறுதலைச்செய்யாதவென்றிச்சிறப்பினையுடைகொற்றவள்ளையும்என்றும்கொற்றவள்ளை தோற்றகொற்றவன்அளிக்கும்திறை (தொல். பொருளதிகாரம் (1) இளம்பூரணர் உரை, ப. 106)**

Isbn Number: 978-93-91115-47-0

என்றும் இத்துறைக்கு உரை வரைவர் இளம்பூரணர். பெருஞ்சோற்று நிலை என்பதற்கு, **பகைவர் நாட்டை வென்று தருவர் என்று கருதி மிகுதியான சோற்றை வீரர் கொள்ளும் வகையில் அரசன் தருவது பெருஞ்சோற்று நிலையாகும் என்று குறிப்பர். (புறநானூறு, முனைவர் அ.மா.பரிமணம்,முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன்(ப. ஆ)ப.647)** இவ்வீரர்தமக்குவெற்றியை ஈட்டித் தருவர் என்று கருதும் மன்னன் அவர்களுக்கு விருந்து கொடுப்பது பழந்தமிழர் மரபு. இதற்கு, **பிண்டமேய பெருஞ்சோற்றுநிலையும் (தொல். புறத். 7)** என்று தொல்காப்பியமும்,

திருந்தார் தெம்முனை தெறுகுவர் இவர் எனப்
பெரும் சோறு ஆடவர் பெறும் முறை வகுத்தன்று
(புறப். வெ. மாலை. 57)

என்று புறப்பொருள் வெண்பாமாலையும் இலக்கணம் இயம்பியுள்ளன. சிலப்பதிகாரம்,

அரும்படைத் தானை அமர்வேட்டுக் கலித்த,
பெரும்படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வகுத்து
(சிலப். வஞ்சி. கால்கோள்.48:49)

என்று கூறுவதும் இத்துறையிலடங்கும்.

புறநானூற்றில் வஞ்சித் திணைக்குக் குறிக்கப்பெறும் துணை வஞ்சி என்பது

Isbn Number: 978-93-91115-47-0

தொல்காப்பியத்தில் ஆளப் பெறவில்லை. இளம்பூரணர் தமது உரையில் இதனை எடுத்தாண்டுள்ளார்.

> **வென்றோர் விளக்கம் முதலிய மூன்றும் ஒழிந்த ஏனையவெல்லாம் இரு திறத்தினர்க்கும் பொதுவாக நிற்றலின் கழி பெருஞ் சிறப்பெனக் கூறினார்.இன்னும் "கழிபெருஞ் சிறப்பின்"என்றமையின், பேரரசர் துணையாக வந்த குறுநில மன்னரும் தாமும் பொலிவெய்திப் பாசறைநிலை உரைத்தலும் பிறவும் கொள்க.இவைபற்றியனதுணைவஞ்சி(தொல். பொருளதிகாரம் (1) இளம்பூரணர் உரை, ப. 107)**

என்பது அக்கூற்று. இத்துறையில் இடம் பெற்ற புறநானூற்றுப் பாடலுக்கு உரை செய்த இளங்குமரனர், **பிறரை வெல்லவேனும் கொல்லவேனும் துணிந்து நிற்கும் வீரனைச் சில கூறி அமைதிப்படுத்துதல் (புறநானூறு, புலவர் இரா.இளங்குமரன் (உ.ஆ),ப.71)** என்று இத்துறைக்கு விளக்கம் தருவர்.

துணை வஞ்சியைப் போன்று மழபுல வஞ்சியும் தொல்காப்பியத்தில் இல்லை. புறப்பொருள் வெண்பாமாலை இத்துறையினை எடுத்தாண்டுள்ளது. மண்ணாசை கொண்டு வேற்று நாட்டின் மீது படையெடுத்த வஞ்சி மறவர் அந்நாட்டிலுள்ள பொருள்களைக் கொள்ளையடிப்பதை விளக்குவது மழபுல

Isbn Number: 978-93-91115-47-0

வஞ்சி என்னும் வஞ்சித் துறை.மழ புலம் –அழிந்த நாடு என்று பொருள். இதனை,

கூடார் முனை கொள்ளை சாற்றி
வீடுஅறக் கவர்ந்த வினை மொழிந்தன்று
(புறப். வெ.மாலை.49)

என்ற கொளுப்பாட்டு உணர்த்துகின்றது. **பகைவர் ஊரில் கொள்ளையிட்டுப் பாழ்படச் செய்தல்; எரியூட்டல் (புறநானூறு, புலவர் இரா. இளங்குமரன் (உ—ஆ) ப.73)** என்ற கருத்து சங்கப் புறப் பாடல்கள் எழுதப்பட்டிருக்கும் முறைக்குப் பொருத்தமானதாகும். இவ்வாறு தொல்காப்பியர் கூறிய வஞ்சித் துறைகள், அவ்விலக்கணத்தை அடியொற்றியும் மாற்றம் பெற்றும் புறநானூற்றில் துறைக் குறிப்புகளாக எழுதப் பெற்றிருப்பது பிற்கால வளர்ச்சிப் போக்கினைக் காட்டுகின்றது.

சோழர்களின் மண் நசையும் போர்க்களமும்

வஞ்சித்திணைப் பாக்களில் மிகுதியானவை சோழர்களின் வலிமையைப் பேசுவன. வெற்றி தரும் வீரப்போர் பலவற்றில் ஈடுபட்டதாக, சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியைப் பரணர் பாடுகின்றார். (புறம்.4) அழகு மிக்க செவ்வானம் போன்ற இரத்தக் கறை படிந்தவாள், போரிடும் வீரர்களின் காலோடு மோதி உராய்ந்து பரல்கள் சிதறிக் காணப்படும்

Isbn Number: 978-93-91115-47-0

காளையின் கொம்புகளைப் போன்ற வீரக்கழல், அம்பு துளைக்கப்பட்ட கேடயம், மானைக் கவ்வி இரத்தம் குடித்த புலியின் சிவந்த வாய் போலத் தோன்றும் கடிவாளம் இடமும் வலமும் திருப்பப்பட்டதால் இரத்தம் கசியும் குதிரையின் சிவந்த வாய், கூற்றுவன் போல் தோன்றும் பகைவர் கோட்டையைக்குத்திக் கூர் மழுங்கிய கொம்புகளையுடைய யானைகள்‘ என்று போர்க்களத்தினை மனக்கண்ணில் நிறுத்துகின்றார் புலவர். இப்படைகளுக்கிடையில் அசைந்தாடும் பொன்தேரில் இளஞ்சேட்சென்னி வருவது நீலக்கடலில் தோன்றும் இளஞ்சூரியனைப்போன்று காட்சி தருவதாகப் பாராட்டி, அவனது படைவலிமையையும் வெற்றிக் களிப்புடைய தோற்றத்தினையும் புகழ்ந்துள்ளார்.

மேலும், அவனோடு போரிட்டுப்பகை கொள்ளும் நாடு உண்ண உணவின்றி வாடும் தாயில்லாக் குழந்தையைப் போல ஓயாத துன்பத்தில் துடித்துக் கொண்டிருக்கும் என்று அவனால் ஏற்படும் பேரழிவினைச் சுட்டிக் காட்டுகின்றார். இதனை,

தாயில் தூவாக் குழவி போல
ஓவாது கூஉநின் உடற்றியோர் நாடே

(புறம்.4:18:19)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. “நாடாளும் அரசன் குழந்தையைக் காப்பது போன்று நாட்டைக் காக்க

 Isbn Number: 978-93-91115-47-0

வேண்டும்” (புறம்:5:6:7) என்பதால் சோழனின் பகைமைக்கு ஆளான நாடு தாயில்லாப் பிள்ளை போலானது என்று உவமித்துள்ளார் புலவர்.

இரவென்றும் பகலென்றும் பாராது பகையரசர் நாட்டைச் சுட்டுப்பொசுக்க அவ்வூரார் கூவியழுகின்ற கூக்குரல் கேட்டும், படையெடுக்கும் வேட்கை தணியாதவன் என்று சோழன் கா◌ிகாற் பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாடியுள்ளார். (புறம்.7) ‘யானைகளைச் செலுத்திய தாள்களும், வீரக்கழல் மிக்க கால்களும், அம்பு தொடுத்துத் தொடுத்துக்குவிந்த கையும், கண்ணைக் கவரும் அழகியவில்லும், பிற மார்புகளை வெறுத்தொதுக்கி விட்டுத் திருமகள் விரும்பத்தக்க அகன்ற மார்பும், பெரிய யானையை எதிர்க்கும் வலிமையும் உடையவன்‘ என்று கரிகாலனின் போர்த் திண்மை செறிந்த தோற்றத்தினையும் படை பலத்தையும் புலவர் இப்பாடலில் எடுத்தியியம்பியுள்ளார்.

எல்லையும் இரவும் எண்ணாய், பகைவர்
ஊர்சுடு விளக்கத்து அழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை; ஆகலின் நல்ல
இல்லஆகுபவால் இயல் தேர்வளவ (புறம். 7:7:10)

என்பது அப்பாட்டு. கரிகாலனின் வெற்றிச் சிறப்பும் பகைவர் நாட்டின் வளமும் அதன் அழிவும் இப்பாடலால்

Isbn Number: 978-93-91115-47-0

புலனாகிறது. கரிகாற்பெருவளத்தான் தமது பெயருக்கிணங்க வளம் கொழிக்கும் நாடுடையவன், ஆகையால் அவன் செழிப்பு மிக்க வளநாடுகளைப் போரிட்டு வெற்றி காண்பதில் விருப்பம் கொள்கிறான் என்பது துணிபு. வளப்பமும் வீரமும் ஒருங்கிருக்கும் நாடுகளைக் கைப்பற்றி வாகை சூடுவதைச் சங்ககால வேந்தர்கள் விரும்பியமைக்கு இப்பாடல் சிறந்த சான்றாகின்றது. *கொள்ளைமேவலை* என்பதால் பகைவர் நாட்டைக் கொள்ளையிடும் வஞ்சித்திணைப் போர்முறையினை இப்பாடலால்அறியமுடிகின்றது.

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் படை வலிமையும் போர்க்கோலமும் பற்றிப் பாண்டரங்கண்ணனார் பாடிய பாடல் (புறம்.16) சோழரின் போர்த்திறனைப் பறைசாற்றுவதாகும். போர்த்தேர்ச்சி மிக்க குதிரைப்படை முகில் போலும் கேடயத்தைப் பரப்பிப் போர்க்களத்தைக் கலங்கடிக்கும். அங்குள்ள விளைநிலத்தைக் கொள்ளையிட்டு அவர்தம் காவல் குளங்களையானைகள் அழிக்கும். வீட்டு மரங்களை விறகாக எரிமூட்டும் செயலானது செங்கதிரோன் சிவப்பிற்கு இடமின்றி எங்கும் பரவிக் காணப்படும். இச்சிறப்புடைய படைபலம் பெற்ற வேந்தன் துணைப்படை வேண்டாத வெற்றியை உடையவன்.

Isbn Number: 978-93-91115-47-0

புலங்கெட இறுக்கும் வரம்பில் தானைத்

துணை வேண்டாச் செருவென்றி (புறம்.16: 9:10)

என்று அவனது தனிப்பெருஞ் சிறப்பினைப் போற்றுகின்றார் புலவர்.

பொதுப்பகைவனாகி நின்ற அரசனைப் பல அரசர்கள் இணைந்து நின்று தாக்கினர். இது துணைப்படை கோடல் எனப்பட்டது. நட்புக் கருதியும், பொருள் தந்த போதும் துணைப்படை தரப்பட்டது (தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், டாக்டர் ஆ.இராமகிருட்டினன், பக். 109-110).

அத்தகைய துணை வேண்டாத தகுதியுடையவன் பெருநற்கிள்ளி. அரசனுக்குரிய குதிகளாகக் கூறப்படுவனவற்றுள் முதலில் இடம்பெறுவது படை. வல்லமைமிக்க படைகளைப் பெற்ற வேந்தன் தன் நாட்டைச் சீர் தூக்கிக் காப்பது திண்ணம்.

படைகுடி கூழ் அமைச்சு நட்புஅரண் ஆறும்

உடையான் அரசருள் ஏறு (குறள். 381)

என்ற குறள் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. ‘பெருநற்கிள்ளி புலால் நாறும் வாளும், முருகனின் சீற்றத்தைப் போன்ற சினமும் உடையவன்’ என்று அவனது தோற்றத்தினைக் காட்சிப்படுத்துகிறார் புலவர். போர்க்குணம் படைத்த அவனால் அழிவு பெற்ற நாடு எத்தன்மைத்து என்பதையும் தம் பாடலில் வெளிப்படுத்துகின்றார்.

Isbn Number: 978-93-91115-47-0

'கரும்புத்தோட்டமாக இருந்த பெரிய விளைநிலங்கள், வள்ளை,அல்லி, பகன்றை, பாகல் உடையதாய்க் காவல் மிக்க பகைவர் நாடு தீக்கிரையாக்கப்பட்டது என்றும் அஞ்சத்தக்க போரை அவனது எண்ணம் போல் யானைப்படைகளும் நிகழ்த்தின' என்றும் பாடியிருப்பது அவ்வேந்தன் புகழை மேம்படுத்திக் காட்டுகிறது. இதனை,

கரும்பு அல்லது காடு அறியாப்
பெருந்தண் பணை பாழாக
ஏம நன்னாடு ஒள்ளெரி யூட்டினை
நாம நல்லமர் செய்ய
ஓராங்குமலைந்தன, பெருமநின்களிறே

(புறம்.16:11:19)

என்ற பாடலடிகளால் அறியமுடிகின்றது. **தொல்காப்பியர் குறிப்பிடும் எரிபரந்தெடுத்தல் எனும் வஞ்சித்துறைக்கு இளம்பூரணர் இப்பாடலைச் சான்று காட்டுவர். (தொல்காப்பியம் பொருளதிகாரம் (1) இளம்பூரணர் உரை,ப.101)** நால்வகைப் படைகளுள் சோழர்கள் யானைப் படைபலத்தில் தேர்ந்தவர்கள் என்பது புறப்பாடல்களால் தெளிவாகின்றது.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் கனவிலும் பகைவர்க்கு அச்சம் தரக்கூடியவன் என்று புகழ்ந்துரைக்கின்றார் கோவூர்க்கிழார் (புறம். 41). கூற்றுவன் கூட ஒரு உயிரைக் கொல்ல அதற்குரிய

Isbn Number: 978-93-91115-47-0

காலத்தை எதிர்பார்ப்பான். ஆனால் நீயோ வேலுடைய வீரர்கள் அழிய நிகழும் போரை நினைத்தவுடன் செய்துமுடிக்கும் ஆற்றல் படைத்தவன் என்று அவனது போராற்றலையும் போரின் மீது அவனுக்கிருக்கும் காதலையும் புனைந்துள்ளார். இதனை,

காலனும் காலம் பார்க்கும் பாராது
வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத்து அடூஉம் வெல்போர் வேந்தே
(புறம்.41:1:3)

என்ற பாடலடிகள் தெளிவுறுத்தும். எட்டுத்திக்கும் படைக்கருவிகள் இருந்த கட்டில் அடியோடு முறிந்து வீழ்வது போலத் தோன்றும் எண்ணற்ற தீ நிமித்தங்களைக் கனவிலே காண்பதற்குக் கூட அஞ்சும்படி, எதிர்ப்பவரிடம் போரிடும் வல்லமை உடையவன். அவன் வென்ற பகை நாடுகள் நெருப்பும் காற்றும் ஒரு சேரப் பற்றிய காடு அழிவது போலக் காட்சியளிக்கும் என்று பாடியுள்ளார்.

பெருங்கலக் குற்றன்றால்தானே காற்றோடு
எரிநிகழ்ந் தன்ன செலவில்
செருமிகு வளவநிற்சினைஇயோர் நாடே
(புறம்.41:16:18)

என்று கிள்ளிவளவனைப் பகைத்த நாடுகளின்

Isbn Number: 978-93-91115-47-0

பேரழிவையும் அவனது போர்த்திறனையும் சிறப்புற மொழிந்துள்ளார் புலவர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் கருவூரை முற்றியிருந்தபோது கருவூர் மன்னன் போருக்குப் பயந்து அரண்மனைக்குள் பதுங்கியிருந்தான். நேரெதிர் நின்று போரிடும் வலிமையில்லாதவரிடம் போர் செய்வதை வீரம் செறிந்தோர் விரும்பமாட்டார். இதனை வெளிப்படுத்தும் வகையில் ஆலத்தூர்க்கிழாரது பாடல் அமைந்துள்ளது (புறம்.36).‘பூ நிறைந்த நெடிய காவல் மரங்களைக் காடுகள்தோறும் பகைவர் வெட்டியழிக்கும் ஒலி, நெடுமதில் அரண்தாண்டி வேந்தன் நீள்செவி உணரக்கேட்டும் அவன் போரிட முன்வரவில்லை.

ஆங்கு இனிதிருந்த வேந்தனொடு ஈங்குநின்
சிலைத்தார் முரசம் கறங்க
மலைத்தனை என்பது நாணுத்தகவுடைத்தே
(புறம்.36:11:13)

என்று பகையரசனின் அச்சம் கூறி, கிள்ளிவளவனின் படை முழக்கத்தினை வெளிப்படுத்தியுள்ளார் புலவர். மேலும், கிள்ளிவளவனைப் பார்த்து,

அடுநை யாயினும் விடுநை யாயினும்
நீயளந் தறிதிநின் புரைமை வார்கோல்
(புறம். 36:1:2)

 Isbn Number: 978-93-91115-47-0

என்று போரைக் கைவிடுமாறு மறைமுகமாகக் குறிப்பிடுகின்றார். ஒருகுடிப் பிறந்த நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் மண்ணாளும் வேட்கை கொண்டு போரிட முனைந்தபோது இருவரையும் போரைக் கைவிடுமாறு அறிவுரை கூறுகின்றார் கோவூர்க்கிழார். மூவேந்தர்களின் பூவையும் சுட்டிக்காட்டிய புலவர், வெற்றிக் கொடி பொலியும் தேருடைய வேந்தர்கள் என்று சோழர்களின் தறுகண்மையை தனிப்படுத்திப் பெருமைப் படுத்துகின்றார்.

ஒரு வீர் தோற்பினும் தோற்பதுங் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே அதனால்
குடிப்பொருள் அன்று நும்செய்தி கொடித்தேர்
நும்மோர்அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும் இவ்இகலே

(புறம். 45:5:9)

என்று ஒரு குடிப்பிறந்தோரை நன்னெறிப்படுத்திய கோவூர்க்கிழார், பகைத்திறம் கொண்டு மாற்றாருடன் போர் செய்வோரையும் அறிவுறுத்தி நெறிப்படுத்துகின்றார். அவ்வகையில் கிள்ளிவளவன் தன் பகைவன் மலையமான் மக்களை யானைக் காலில் கிடத்திக் கொல்ல முயன்ற போது, அக்கொடூர நிகழ்வினைத் தடுத்து நிறுத்திய பாடல் குறிப்பிடத்தக்கது (புறம்.46). வளவனின் பகைவனும் சிறப்புடையவன்

Isbn Number: 978-93-91115-47-0

என்பதனால் இருவரின் குலப்பெருமையும் இப்பாடலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

களிறு கண்டு அழூஉம் அழாஅல் மறந்த
புன்தலைச் சிறாஅர் மன்று மருண்டு நோக்கி
விருந்திற் புன்கண்நோ வுடையர்;
கேட்டனை யாயின் நீ வேட்டது செய்ம்மே!

(புறம். 46: 5: 8)

அறியாப் பருவத்துச் சிறாரைப் பகைவராயினும் துன்புறுத்தக் கூடாது எனும் போர்நெறியினை இப்பாடலில் பதிவு செய்கின்றார் புலவர்.

பகையும் போரும் எந்நாளும் இவ்வுலகில் உண்டு. மண்ணாளும் மன்னாரின் ஆசைக்கு ஓர் அளவில்லை. அகிலமெல்லாம் கட்டி ஆண்டாலும் கடல் மீதிலே ஆணை செலுத்த விரும்புவர். கடலாட்சி பெற்ற பின்னர் வானவெளியை ஏகபோகமாகஆள ஆசைப்படுவர். இத்தகைய ஆசையால் வருவது பூசல். (தமிழர் வீரம், ரா.பி.சேதுப்பிள்ளை. ப.76)

சோழர்களின் வலிமை, வளமை ஆகிய இரண்டையும் சிறப்பித்துப் பாடிய கோவூர்க்கிழார், பரிசில் பெறும் புலவர்களின் தனிச்சிறப்புமிக்க புகழையும் பெருமைப்படுத்திப் பாடியுள்ளார் (புறம்.47). புலவர் இளந்தத்தனை நலங்கிள்ளியின் ஒற்றன் எனக் கருதி,

Isbn Number: 978-93-91115-47-0

நெடுங்கிள்ளி அவரைக் கொல்லத் துணிந்த போது கோவூர்க்கிழார் உண்மை நிலையினை எடுத்துக் கூறியதாக அமைந்தது இப்பாடல்.

ஆங்கு இனிது ஒழுகின் அல்லது ஓங்கு புகழ்
மண்ணாள் செல்வ எய்த
நும்மோர்அன்ன செம்மலும் உடைத்தே

(புறம். 47:9:11)

அறிவு மேம்பாட்டினால் தமக்கு மாறானவரை வெற்றி கொண்ட புலவர், மண் ஆளும் தகுதியுடைய வளம் கொழிக்கும் நாடுடைய நெடுங்கிள்ளியைப் போன்ற பெருமிதம்மிக்கவராவர் என்று புலவர் பெருமை கூறப்போந்த கோவூர்க்கிழார் நெடுங்கிள்ளியின் மண்ணாளும் திறத்தினைப் பேசுகின்றார். மண்ணாளும் வேட்கை உடன்பிறந்தோருக்குள்ளும் பகையை உண்டாக்கும் இயல்பு தொன்று தொட்டு வந்த மரபாகும் என்பதைச் சங்கப்பாடல்கள் தெற்றென விளக்குகின்றன.

கோப்பெருஞ்சோழன் தம் மக்கள் மீது போர் தொடுக்கச் சென்றபோது, அவனைப் பார்த்து புல்லாற்றூர் எயிற்றியனார் பாடிய பாடல் மக்களுக்கு விட்டுக்கொடுத்துப் பொறுத்தாளும் பேரறத்தினை வலியுறுத்துகின்றது (புறம்.213). இப்பாடலில் சோழனின் படைவலிமையும், யானைப் படைத்திறமும் போற்றப் பெற்றுள்ளது. அடர்ந்து வந்த போரில் வென்ற வலிய

 Isbn Number: 978-93-91115-47-0

ஆற்றலும் கடிய முயற்சியும் உடையவனாய் வெண்கொற்றக் குடை விளங்கும் வேந்தனே! என்று போற்றிய புலவர், "அமர்வெம் காட்சி" (213:6), "அமர்வெம் செல்வ" (புறம். 213:17) என்று சோழரின் படைப்பெருமையை எடுத்துரைக்கின்றார். போர் புரிதலைத் தவிர்க்குமாறு கேட்கின்றார்.

அதியனின் மண்நசையும் போர்க்களமும்

மண்நசை காரணமாகப் போர்தொடுத்தவர்களுள் அதியமான் நெடுமான் அஞ்சியும் குறிப்பிடத்தக்கவன். இதற்கு ஔவையார் பாடியவஞ்சித்திணைப் பாடல்கள் (புறம்.98,100) சான்றுகளாகின்றன. நீர்வளமும் நிலவளமும் மிக்க பகைவர் நாட்டைச் சீர்குலைக்க வேண்டாமென்று இரங்கிக் கேட்க விரும்பிய ஔவையார் அதியனின் படைபலத்தைப் பற்றி எடுத்துரைக்கின்றார்.

'போர் முனையிலே பகைவர் வலியடங்க மோதியதால் தேய்ந்து குறைந்த தந்தங்களையுடைய அதியனின் யானைப் படையினைக் கண்ட பகைவர், தம் வாயிற் காவலின் மதிலுக்குப் புதிய கதவுகளும் கணைய மரங்களும் பொருத்துவதற்காகப் பழையனவற்றை அகற்றுவர். போர்க்களத்தில் இறந்து கிடக்கின்ற பிணங்கள் உருவழியக் குருதிக்கறையுடன் கலங்கடிக்கும் அவனது குதிரைப்படை போவதைப் பார்த்த பகைவர் கருவேலமுள்ளால் தம் காட்டரண்களின் வாயில்களை

Isbn Number: 978-93-91115-47-0

அடைப்பர். பகைவர் மார்போடு பொருந்தி நிற்காது அதைத் துளைத்துக் கொண்டு வரும் உறையிலிடப்படாத அதியனின் வேலைக் கண்டவர்கள் தம் கேடயங்களுக்குப் புதிய கைப்பிடியும் தோலுறையும் இடுவர். விழுப்புண்பட்ட அம்மன்னனின் வீரர்களது ஆற்றலைக் கண்டவர்கள், குருதி தோய்ந்த அம்புகளைத் தம் அம்பறாத் துணியில் அடக்கிக் கொள்வர்' என்று அதியனின் செருக்களத் தன்மையினை விரித்துரைக்கின்றார் ஔவையார்.

நீயே ஐயவி புகைப்பவும் தாங்காது ஒய்யென
உறுமுறை மரபின் புறம்நின்று உய்க்கும்
கூற்றத்து அனையை ஆகலின் போற்றார்
இரங்க விளிவது கொல்லோ (புறம். 98: 15: 18)

என்ற பாடலடிகளில் அதியனின் படைபலமும் வீரச் செயலும் ஒருங்கிருந்தமை புலனாகின்றது. உயிரைப் பறிக்கக் காலம் பார்க்கும் காலன் என்று சோழனைக் கோவூர்க்கிழார் பாட, இங்கு கூற்றுவனைப் போல விரைந்து வந்து பகைவர் உயிரைப் பறிக்கக் கூடியவன் அதியன் என்று பாடுகின்றார் ஔவையார்.

வரிப்புலியோடு போரிட்ட வலிமை மிக்க யானையைப் போல, போர் முடிவுற்ற பின்னும் நீங்காத சினம் உடையவனாகப் போர்க்கோலத்துடன் தம் மகனைக் காண்கிறான் அதியன். இக்காட்சியைக் கண்ட

Isbn Number: 978-93-91115-47-0

ஔவையார், இவனைப் பகைத்தவர் தப்பிப் பிழைத்தல் அரிது என்றும் அனல் தெறிக்கப் பகைவரை நோக்கிய இவனது செந்நிறக்கண்கள் தனது அன்பு மகனைப் பார்த்த போதும் மாறவில்லையே என்றும் பாராட்டுகின்றார்.

கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்
வட்கர் போகிய வளரிளம் போந்தை
உச்சிக் கொண்ட ஊசி வெண்தோட்டு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்
சுரிஇரும்பித்தை பொலியச் சூடி (புறம். 100: 1: 6)

என்று அதியமானின் போர்க்கோலத் தோற்றம் ஔவையாரால் போற்றிப் புகழ்ந்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு காணுங்கால், அக்காலத் தமிழக வரலாறு என்பது போரை வெறுத்து ஒதுக்காது விரும்பி மேற்கொண்டு பயின்ற சுறுசுறுப்பும் வலுவும் மிகுந்த ஒரு மக்களின் கதை என்பது போதரும். நமது சான்றுகளில் பெரும்பகுதியான அக்கால இலக்கியத்தை ஆய்ந்து பார்த்தால், மக்கள் போரையே தமது முக்கியமான அலுவலாகக் கொண்ட ஒரு சமுதாயத்தை அது படம்பிடித்துக்

Isbn Number: 978-93-91115-47-0

காட்டுவது வெளிப்படையாகும். அன்றியும், பிற சமுதாயங்களைப் போல, பண்டைத் தமிழர்களிடையேயும் 'போர் மன்னனை ஈன்றது' (சங்ககால வாழ்வியல், டாக்டர் ந.சுப்ரமண்யன், ப.161)

என்ற கூற்று அதியனின் வாழ்க்கை வரலாற்றிற்குச் சிறந்த சான்றாகின்றது.

பாண்டியனின் மண்நசையும் போர்க்களமும்

மாறுகொண்டு வீரப்போர் செய்யும் வேந்தன் பகைவனது காவல் மரத்தினை வீழ்த்தினான் எனின் அவன் வெற்றி பெற்றவனாகக் கருதப்படுவான். ஒரு நாட்டினுடைய காவல்மரம் பகைவனால் வெட்டப்படுமாயின், அது அந்நாட்டிற்குப் பெரும் இழுக்காகும்.

இக்காவல் மரம் இரவு பகலாக அந்நாட்டு வீரர்களால் காக்கப்பட்டு வந்ததால் அது 'கடிமரம்' எனவும் வழங்கப்பட்டது என்பதையும் அறிதல் வேண்டும். ஆகவே, ஒருவன் இம்மரத்தை வெட்டுகிறான் என்று சொன்னால் அவன் போரில் வெற்றி பெற்றவன் என்பது பொருளாகும் (பழந்தமிழர் பண்பாடும் நாகரிகமும், லேனா தமிழ்வாணன், ப.125)

 Isbn Number: 978-93-91115-47-0

இக்கருத்திற்கிணங்கப் போர்த்திறம் படைத்தவன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன் என்னும் பாண்டிய மன்னனாவான். ‘பகைவரதுகடிமரம் தடிதல்வேண்டாமென‘அம்மன்னனிடம் வேண்டுகின்றார் காரிக்கண்ணனார்.

கடிமரம் தடிதல் ஓம்புநின்
நெடுநல்யானைக் கந்து ஆற்றாவே (புறம்.57:5: 11)

என்பது அப்பாட்டு. ‘கல்வியறிவில் சிறந்தோராயினும் அற்றோராயினும், புகழ்வோர்க்கு மாயோனைப் போல வழங்கும் நன்மாறனே; நீ உன் பகைவர் நாட்டைப் பற்றிக் கொள்ளும் போது அவர் நாட்டிலுள்ள முதிர்ந்த கதிர்களை உன் வீரர் கொள்ளையிடினும் இடுக; அகன்ற ஊரை எரிக்கினும் எரிக்க; உன்வேல் பகைவரை அழிப்பினும் அழிக்க; பகைவர் நாட்டின் காவல் மரத்தை வெட்டுவதை மட்டும் கைவிடுக; ஏனெனில் உன் நெடிய யானைக்கு அது நடு தூண் ஆகும் தகுதி உடைத்தன்று; இளமரமாகும்’ எனப் பாண்டியன் நன்மாறனிடம் வேண்டுகின்றார் புலவர்.

பகைவர் நாட்டு வளங்களைக் கொள்ளையடித்தல், ஊர்களை எரியூட்டுதல் ஆகிய போர்க்கள நடைமுறைகள் இப்பாடலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. நன்மாறனது யானைப் படைத்திறத்தின் பெருமையும், அவன் வேலேந்திப் பகையழிக்கும் பலம் பெற்றவன் என்பதும்

 Isbn Number: 978-93-91115-47-0

பாண்டியர்களது போர்க்கள வெற்றியினை உலகுக்கு உரைப்பனவாகும். **இப்பாடலை இளம்பூரணர், தொல்காப்பியத்தின் பாடாண் திணையில் இடம்பெறும் 'கொற்றவள்ளையும் ஒரிடத்தான' (தொல். பொருள். புறத். 28)** என்ற நூற்பாவிற்குச் சான்றாகக் காட்டுவர்.

"கொற்றவள்ளை ஓர் இடத்துப் பாடாண்பாட்டாம் என்றது, துறை கூறும் கருத்தாயின் வஞ்சியாம். புகழ்தல் கருத்தாயின் பாடாண் திணையாம்" (தொல்காப்பியம் பொருளதிகாரம்(1) இளம்பூரணர்உரை,ப.154) என்று உரைப்பினும் போர் நிகழ்வுகளை நோக்கும்போது இப்பாடல் வஞ்சித்துறைக்குப் பொருந்துவதாகின்றது.

'என் முறை வருக' என்னான் மூவேந்தர் குடியினரும் ஈடுபட்ட வஞ்சித்திணைப் போரைச் சுட்டிக் காட்டிய புறநானூற்றில் தனியொரு மறவனின் வெற்றி வீரப்போரினைப் புலப்படுத்தும் பாடலும் (புறம்.292) இடம்பெற்றுள்ளது. வேந்தன் பெயர் சுட்டாது இடம் பெற்ற வஞ்சித்திணைப் பாடல் இதுவொன்றேயாகும். விரிச்சியூர் நன்னாகனார் இப்பாடலைப் பாடியுள்ளார். வரிசையறிந்து சோறளிக்கும் நிகழ்வில் மாவீரனின் போர்த்திறம் பாராட்டப்படுகின்றது. 'அரசருக்கென்று பொன் கலத்திலே வடித்த சுவைமிக்க தேன்மதுவை இவ்வீரனுக்கேற்ற முறையிலே கலந்து கொடுக்க, அதை ஏற்காது மறுத்து, உடைவாளைப் பற்றிக் கொண்டு

Isbn Number: 978-93-91115-47-0

நிற்கின்றான் என்று கோபம் கொள்ள வேண்டாம். இங்கே இவன் எப்படி ஆண்மை சிறக்க, வீரத்தோடு வாளைப் பற்றி எழுந்தானோ, அதனைப் போன்றே போர்க்களத்திலும், பகைவரைக் களம் காண என்முறை வரட்டுமென்று காத்திராமல் விரைந்து முன்னேறி, போரிடவரும் எதிரிகளை அழித்து வீரம் காக்கும் ஆண் தகைமையுடைய மாவீரன் இவனே என்பதை அறிக' என்று படைவீரனின் போர்ச் செருக்கினைப் போற்றிப் பாடுகின்றார் புலவர். இதனை,

ஈண்டே போல வேண்டுவன் ஆயின்
'என் முறை வருக'என்னான்; கம்என
எழுதரு பெரும்படை விலக்கி
ஆண்டுநிற்கும்ஆண்தகையன்னே (புறம். 292:5:8)

என்ற பாடலடிகள் தெளிவுறுத்தும். இதற்கு, 'பெருஞ்சோற்று நிலை' எனும் வஞ்சித்துறையை உரையாசிரியர்கள் வகுத்திருப்பினும், பெரும்படை வரினும் அஞ்சாது எதிர்கொள்ளும் 'வருவிசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கியபெருமையானும்' என்ற வஞ்சித்துறையும் பொருந்தி வருகின்றது. போர்க்களத்தில் பின்னிற்காது தான் முதல்வனாக நின்று போர்புரியும் செருக்களச் சிந்தையுடையவன் என்பதால் பெருஞ் சோறளிக்கும் நிகழ்விலும் அக்குணம் வெளிப்படுகின்றது. வீரர்களைப் போருக்குத் தூண்டும் விதமாகப்

Isbn Number: 978-93-91115-47-0

பெருஞ்சோறு கொடுக்கும் வழக்கம் பண்டு இருந்தமை இதனால் புலனாகின்றது. பழந்தமிழ்நாடு வீரத்தின் விளைநிலம் என்பதற்கு இப்பாடல் தக்கசான்றாகின்றது. வேந்தர்கள் எண்ணியதை விரைந்து செயலாக்கம் தரும் வீரர்கள் கொண்டது தமிழகம்.

தொகுப்புரை

நாட்டை விரிவாக்கும் நோக்குடன் போரிடுவது வஞ்சித் திணைப் போராகும். இப்போர் முறைகளைப் பற்றித் தொல்காப்பியம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. காலத்திற்கேற்ப துறைகள் மாற்றம் பெற்றிருப்பினும் போரின் நோக்கமும் பொருளும் தாக்கம் பெறவில்லை. பழந்தமிழரின் வீரத்தைப் பறை சாற்றுவதில் புறநானூற்றின் வஞ்சித்திணைப் பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. போர்க்களத்தில் வேந்தனின் படைகள் பகைவரது நாட்டைப் பேரழிவுக்குக் கொண்டு செல்லும் நிலை, போரிடும் வேந்தர்களின் தோற்றப்பொலிவு, இரங்கத்தக்க நிலையிலிருக்கும் பகை நாடுகள், போர் வீரர்களின் தறுகண்மை ஆகியவை மூவேந்தர்களது வஞ்சித்திணைப் போரிலும் இடம்பெற்றுள்ளன.

வேந்தர்களின் வீரத்தினைப் புகழ்ந்து பெருமைப்படுத்தும் நோக்கில் பாடல்களைப் பாடியிருப்பினும், புலவர்கள் மன்னர்களுக்கு அறிவுறுத்தவும் காலம் தாழ்த்தவில்லை என்பது அவர்தம்

 Isbn Number: 978-93-91115-47-0

பாடல்களால் புலனாகின்றது. போர்க்களம் கண்டு அஞ்சும் பகைவர்களை விட்டொழிக்குமாறு மன்னர்களிடம் வேண்டும் அறமும் பாடல்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. பழந்தமிழகத்தின் படை வளத்தினையும் பெருக்கத்தினையும் பற்றிப் பேசுவனவாக வஞ்சிப் பாடல்கள் புனையப்பட்டுள்ளன. போர்க்களத்தில் தம்மை நோக்கி வரும் படைக்கலத்தைத் துச்சமாகக் கருதி எதிர்த்துப் போரிடும் வீரர்தம் இயல்பும், செருக்களத்தில் விழித்தகண் இமைத்தலை மறந்து போர்செய்த அவர்தம் ஆற்றலும், புறநானூற்று வஞ்சித்திணைப் பாக்களால் புலனாகின்றது.

துணைநூற்பட்டியல்

[1] இராமகிருட்டினன்.ஆ, *தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்*, சர்வோதய இலக்கியப் பண்ணை மதுரை, 2012.

[2] இளங்குமரன். இரா (உ.ஆ) *புறநானூறு*, கோவிலூர் மடாலயம், கோவிலூர், காரைக்குடி, 2003.

[3] சண்முகம்பிள்ளை.மு (ப.ஆ), *தொல்காப்பியம் பொருளதிகாரம் (1) இளம் பூரணம்*, முல்லை நிலையம், சென்னை, 1995.

[4 சுப்ரமண்யன். ந., *சங்ககால வாழ்வியல்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2017.

 Isbn Number: 978-93-91115-47-0

[5] சேதுப்பிள்ளை.ரா.பி., *தமிழர் வீரம்*, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1981.

[6] சேதுராமன்.கு, *தமிழகச் சமுதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை, 2018.

[7] பரிமணம்.அ.மா, பாலசுப்பிரமணியன்.கு.வெ. (பஆ), *புறநானூறு மூலமும் உரையும் (புத்தகம் -2)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ப. 647.

[8] லேனா தமிழ்வாணன். *பழந்தமிழர் பண்பாடும் நாகரிகமும்*, மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1982.

 Isbn Number: 978-93-91115-47-0

Elephant Warefare in Kalavazhi Narpathu

Dr.R. Singaraja, Assitant Professor, Department of Tamil,
Mannar Thirumalai Naicker College, Madurai-625004, TamilNadu, India.
ORCiD: **https://orcid.org/0000-0002-6969-3496**
DOI:10.5281/zenodo.5599229

Abstract

The Songs of "Kala Vazhi Narpathu" details about the war between the Chera king Cheraman Kanaikaleerum and Poraikum Cholan KoChenkannan. The poet Poikaiyar registers that the elephant army is one of the indispensable ones in the king's army. Poikaiyar has employed the terms Yanai (Elephant), Kaliru and Velam (Male Elephant) in his poems. In his style, wherever the word elephant comes, it is better to take it in the context of a male elephant. The Elephant army, Horse army, Chariot army and the Infantry are the important armies of the kings. The songs of the poet praise the elephant army that participated in the war. It is also mentioned the victory of the Chola King KoChenkannan is only by the efficient elephant army in the Kalumalam War.

Keywords: *Kalavazhi Narpathu*, Elephant Army, War, Chola, Victory.

References

[1] Elampooranar. *Tholkappiam (Porulathikaram).* Kalagaveliyeedu, Chennai, 1969.

[2] U. V. Suvaminathaiyar. *Pathuppattu Moolamum Nachinarkiniar Uraiyum.* U. V. Saminathaiyar Pathipagam, Chennai. 1974.

[3] U. V. Suvaminathaiyar. *Purananooru Moolamum Uraiyum.* ThiyagarasavilasaVeliyeedu, Chennai, 1963.

[4] Somasuntharanar. P. V. *Natrinai (Narayanasami Iyar Uraiyum).* Kalagaveliyeedu, Chennai, 1967.

[5] Duraisamipillai. S. Pathitrupathu. Kalagaveliyeedu, Chennai, 1968.

[6] Duraisamipillai. S. *Purananooru,* Kalagaveliyeedu, Chennai, 1970.

[7] G. V. Balasubramaniam. *Sanga Ilakiathil Puraporul.* Meerapathipagam, Puthukottai, 1996.

[8] Magadeva Muthaliar. V. *Iniavai Narpathu,* Kalagaveliyeedu, Chennai, 1965.

[9] Magadevan. Kathir. *Palanthanilar Veerappanpadu.* Earagaveliyeedu, Madurai, 1980.

[10] Vengatasamy Nattar. N. M. *Enna Narpathu.* Kalagaveliyeedu, Chennai, 1973.

[11] Vengatasamy Nattar. N. M. *Kalavazhi Narpathu.* Kalagaveliyeedu, Chennai, 1970.

Isbn Number: 978-93-91115-47-0

களவழி நாற்பதில் களிற்றுப்போர்

முனைவர் இரா. சிங்கராஜா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை-04, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: **https://orcid.org/0000-0002-6969-3496**
DOI:10.5281/zenodo.5599229

ஆய்வுச்சுருக்கம்

'களவழி நாற்பது' கழுமலம் என்ற இடத்தில் சேரமான் கணைக்காலிரும் பொறைக்கும் சோழன் கோச்செங்கணானுக்கும் நிகழ்ந்த போரினை விளக்குகின்றது. போரில் களிற்றுப்படை மிக இன்றியமையாத இடம்பெற்றிருந்தது என்று பொய்கையார் விளக்கியுள்ளார். யானை என்ற பொதுச்சொல்லையும் ஆண்யானையைக் குறிக்கும் களிறு, வேழம் என்ற சொற்களையும் பொய்கையார் கையாண்டுள்ளார். அவருடைய மொழிநடையில் யானை என வழங்குகின்ற இடங்களிலெல்லாம் ஆண்யானை என்று பொருள்கொள்ளுவதே பொருத்தமாகும். களிற்றுப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகிய நான்குவகையான படைகளுள் களிற்றுப்படையின் போர்முறையை வியந்துபாடியும், கழுமலப் போரில் சோழன் கோச்செங்கணான் வெற்றி

 Isbn Number: 978-93-91115-47-0

பெற்றதற்கு அவனுடைய களிற்றுப்படை யே காரணமாக அமைந்துள்ளது என்பதையும் எடுத்துரைப்பதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்..

கலைச்சொற்கள்: களவழி நாற்பது, களிறு, போர், சோழன், வெற்றி

முன்னுரை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் புறத்திணை சார்ந்த ‘களவழி நாற்பது’ கழுமலம் என்ற இடத்தில் சேரமான் கணைக்காலிரும் பொறைக்கும் சோழன் கோச்செங்கணானுக்கும் நிகழ்ந்த போரினைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகின்றது. களிற்றுப்படை மிக இன்றியமையாத இடம்பெற்றிருந்தது என்று பொய்கையார் விளக்கியுள்ளார். சேரமான் கணைக்காலிரும் பொறை வலிமையான களிற்றுப்படை வைத்திருந்ததைப்போலவே சோழன் கோச் செங்கணானும் களிற்றுப்படை வைத்திருந்தான். கழுமலப் போரில் சோழன் கோச்செங்கணான் வெற்றி பெற்றதற்கு அவனுடைய களிற்றுப்படையே காரணமாக அமைந்துள்ளது என்பது பற்றி எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

களிற்றுப் போர்க்களக் காட்சி

சேரமான் கணைக்காலிரும்பொறை மதம்பிடித்த

Isbn Number: 978-93-91115-47-0

யானையை அடக்கும் அளவுக்கு உடல்வன்மை பெற்றிருந்தான். அவனுடைய களிற்றுப்படையைச் சேர்ந்த ஒரு யானை மதம்பிடித்து அழிவுவேலைகளில் இறங்கியது. அதனால் பாசறையே நடுங்கிவிட்டது. அந்த யானையைப் பிடித்து அடக்கும் ஆற்றல் அங்கிருந்த மறவர் ஒருவருக்குமில்லை. யானையின் ஆரவாரத்தைக் கண்டு அஞ்சிய வீரர் உறக்கத்தையும் மறந்துவிட்டார்கள். அச்செய்திகேட்ட சேரமான் கணைக்காலிரும்பொறை அந்த யானையைப் பிடித்து அடக்கிக் கட்டுத்தறியில் கட்டினான். கடலலைபோல் ஆரவாரம் செய்த வீரர்கள் அமைதியுற்றவர் என்ற செய்தியை நற்றிணையில் காணுகின்றோம்.

கானல்அம் தொண்டிப் பொருநன்: வென்வேல்
தெறல்அரும் தானைப் பொறையன்: பாசறை
நெஞ்சம்நடுக்கு உறூஉம துஞ்சா மறவர்
திரைதபு கடலின் இனிது கண்படுப்பக்
கடாஅம் கழீஇய கதன்அடங்கு யானை (நற்.18)

கழுமலப்போரில் சோழன் கோச்செங்கணான் வெற்றிபெற்றதற்கு அவனுடைய களிற்றுப்படை காரணமாக அமைந்தது. சோழன் கோச்செங்கணான் படை நடத்துவதில் சேரமான் கணைக்காலிரும் பொறையைவிடத் திறன் பெற்றவனாக விளங்கினான். தேர்ப்படையை முன்னிறுத்தி அவனுடைய

 Isbn Number: 978-93-91115-47-0

யானைப்படை முன்னேறி வந்தது. வரிகளின் வனப்பு விளங்கும் நெற்றி, ஆடி அசையும் பருவுடல், தொங்கும் துதிக்கை ஆகியன சிறப்பளிக்க, வரிசைவரிசையாக முன்னேறி வந்தது களிற்றுப்படை, வாள்வீரர் யானைப்படையின் வரவுகண்டு உள்ளம் நடுங்கினாரல்லர். மாறாக, மேலும் ஊக்கம் கொண்டனர். அவை தொலைவில் வருங்கால், அசை நடையிட்டு வரும் அழகைக் கண்டுகளித்தனர். வந்த யானைப்படை வாள்வீரரைத் தம் வலம் கொண்டு தாக்கின. அதனால் சிறிதே தளர்ந்தனர். ஆனால் பின்னிட்டாரல்லர். கைவாள்கள் அவர் வீரத்தை ஊக்கின, அதனால் ஒடாது உறுத்து நோக்கினர். களிற்றுக்கு ஆற்றல் அளிப்பன அவற்றின் துதிக்கைகளே என்பதைக் கண்டுகொண்டனர். உடனே தம் வாள்களை ஒச்சி, துதிக்கைகட்குக் குறிவைத்தனர். தொங்கும் துதிக்கைகள் அற்று வீழ்ந்தன. அவ்வாறு வீழ்ந்த துதிக்கைகளுள் ஒன்று அங்கு, அதற்குமுன்பே அழிந்த தேர்ப்படையின் சிதைந்த வெண்கொற்றக் குடையில் ஒருபாதியும் மண்ணில் ஒருபாதியுமாக வீழ்ந்தது.

இருநிலஞ் சேர்ந்த குடைக்கீழ் வரிநுதல்
ஆடியல் யானைத் தடக்கை யொளிறுவாள்
ஓடா மறவர் துணிப்பத் துணிந்தவை
…நாடன்கூடாரை யட்ட களத்து. (கள. நா. 22)

Isbn Number: 978-93-91115-47-0

களிற்றுப்படையின் வலிமை

சேரநாட்டு மன்னனை வென்று சிறைகொள்ள அவன் களிற்றுப்படையை வலிமையிழக்கச் செய்யவேண்டும். அதனை வெற்றிகொள்வது வாட்படை வீரரால் இயலாது. களிறுகளை நெருங்கிய பின்னரல்லவா வாள்கள் தொழிற்படும். களிறுகள்தாம் வீரர்தம்மை அணுகுவதற்கு முன்பே தம்நீண்ட கைகளால் அவரை அழித்து விடுகின்றனவே. அதனால் வாட்படை, களிற்றுப் படையை வென்றழிக்கும் என எதிர்பார்ப்பதற்கு இடமில்லை. வில்வீரர் துணையால் வீழ்த்தலாம் என்றால் அதுவும் இயலாது. வீரர் ஏவ வில்லினின்றும் விரைந்து புறப்படும் அம்புகள், களிறுகளின் பருவுடலில் எங்கோ ஒருபகுதியில் பாய்ந்து விடுகின்றன. தம் உடம்பில் அம்பேறுண்டது என்ற உணர்வு களிறுகளுக்கு உண்டாவதாகத் தெரியவில்லை. ஆகவே களிறுகளை வில்வீரர் வென்று அழிக்கார். களிறுகளை அணுகுவதும் கூடாது: வாள் வீச்சால் விளையும் விழுப்புண்போலும் பெரும்புண்களை உண்டாக்க வேண்டும். வாள் வீரராலும் வில்வீரராலும் முடியாத செயலை வேல்வீரர் முடிப்பர் என அறிந்தான் சோழநாட்டு மன்னன். உடனே வேற்படை, களிற்றுப்படை முன்சென்று நின்றது.

களிறுகளை எதிர்த்து நின்ற வேல்வீரர்கள் பகைவர் அரனை அழிக்கவல்ல களிறுகளின்

 Isbn Number: 978-93-91115-47-0

கோடுகளுக்கு நடுவே நுதலில் குறிவைத்து வேலை வீசி எறிந்தனர் என்பதை களிவழி நாற்பதில் (பதினான்காவது பாடலில்) காணுகின்றோம். சேரமான் கணைக்காலிரும் பொறையைச் சிறை செய்து கொண்டுபோதல் வேண்டும் என்ற வேட்கை சோழன் கோச்செங்கணான் உள்ளத்தில் வேரூன்றி நின்றது. ஆதனால் தன் படை முழுவதையும் பயன்படுத்திக் கொள்ளத் துணிந்தான். வாட்படை, விற்படை, வேற்படை, முதலான பல்வகைப் படைகளும் போர்க்களம் புகுந்ததையும் சோழன் கோச்செங்கணான் வெற்றி பெற அவனது களிற்றுப்படையும் காரணமாக அமைந்துள்ளதையும் கான முடிகின்றது. வேழம் உடைத்து மலைநாடு' எனப் பாரட்டப்பெற்ற சேரன் படையில் களிறுகள் மிகுதியாய் இருந்தன் என்றாலும் சேரனைவிட, சோழன் போர்த்திறம் பெற்றவன் என்பதை களவழி நாற்பதின் வழியாக அறிய முடிகின்றது.

குன்றின்மேல் குருவிக்கூட்டம்

கொம்புள்ளவற்றிற்கு ஐந்தும், குதிரைகளுக்குப் பத்தும் என்றால், யானைகளுக்கு ஆயிரம் முழம் இடைவெளிவிட்டுச் செல்லவேண்டும் என்று கூறுவார்கள். போருக்கு என்று பழக்கிய யானைகளுக்கு வெறியூட்டிவிட்ட நிலையில், அவற்றின் கண்ணில்படாத இடத்தில் இருப்பதே நல்லது. அவ்வளவு நெடுந்தொலைவில் நிற்பதே நலம்பயக்கும்.

Isbn Number: 978-93-91115-47-0

சேரனைச் சிறைபிடிக்க வேண்டுமாயின் அவன் களிற்றுப்படையை முதலில் வெற்றிகொள்ளுதல் வேண்டும். ஆகையால் சோழநாட்டுப்படை, சேரனின் களிற்றுப்படையின் அணிவகுப்பையே சுற்றி வளைத்துக்கொண்டது. சோழர்படைக்கு அவ்வளவு நெஞ்சத்துணிவு உண்டானமைக்குக் காரணம், அப்படை தன் அங்கமாக விற்படை அணி ஒன்றைப் பெற்றிருந்ததேயாகும். களிறுகளை நெருங்காமல் நெடுந்தொலைவில் நின்றுபோரிடும் வில்லாளர் பலர் அப்படையில் இடம்பெற்றிருந்தனர்.

களம்புகுந்த வில்வீரர் விற்களை வளைத்து அம்புகளை ஏவினர். அம்புகள் குறிதவறாமல் களிறுகளின்மீது புதைந்தன. இறுதியில் அக்களிறுகள் நிலைகலங்கி அழிந்தன. ஒன்றையொன்று அடுத்துநிற்கும் குன்றுபோல் காட்சியளித்தன. ஒன்றன்மீது ஒன்றாக வீழ்ந்து இறந்தன. அம்புகள் தைத்துக் களிறுகள் வீழ்ந்துகிடக்கும் காட்சி, குருவிக்கூட்டம் குன்றின்மீது அமர்ந்திருப்பதுபோல தோன்றிற்று. இதனை,

யானைமேல் யானை நெரிதர வானாது
கண்ணோர் கடுங்கனை மெய்ம்மாய்ப்ப-எவ்வாயும்
எண்ணருங் குன்றிற் குரீஇயினம் போன்றவே
பண்ணா ரிடிமுரசிற் பாய்புன வீநாடன்
நண்ணாரை யட்ட களத்து. (கள. நா. 8)

Isbn Number: 978-93-91115-47-0

எனவரும் பாடற்பகுதி சுட்டுகின்றது.

செங்குன்று கரியநிறமுள்ள களிறுகளின் உடல்முழுவதும் குருதிபடிந்து செங்குன்றைப்போலக் காட்சியளித்துன. உருளும் முரசு பகைவருடைய அம்புகளால் கண்ணை இழந்த யானை தன் காலாள் வீரர் விட்டுப்போன முரசை உதைக்க இடிபோல அது அதிர்ந்தது.

ஒழிமுரச மொண்குருதி யாடித் - தொழின்மடிந்து
கண்காணா யானை யுதைப்ப விழுமென
மங்குன் மழையி னதிரும்.(கள. நா. 11)

தீவாய்க்குருதி

போரில் அம்பு தைத்துக் குருதிவடிகின்ற யானையின் தோற்றம் செம்மண் மலைமீது மழைபொழிய அங்கிருந்த ஒடிவரும் செந்நீரைப்போல இருந்தது. (கள. நா. 12)

துடிக்கும் துதிக்கை

வீரர்களால் வெட்டப்பட்ட களிறுகளின் துதிக்கைகள் இடியொலிகேட்ட நாகங்கள் துடிப்பதுபோன்று துடித்தன.

நிரைகதிர் நீளெஃக நீட்டி வாயவ்
வரைபுரை யானைக்கை நூற – வரைமேல்
உருமெறி பாம்பிற் புரளுஞ் செருமொய்ம்பிற்
சேஎய்பொரு தட்ட களத்து. (கள. நா. 13.)

Isbn Number: 978-93-91115-47-0

யானையின் துதிக்கையை வெட்டி வீழ்த்த அத்துதிக்கையிலிருந்து குருதி சொரிகின்றது. அது கருப்புப் பையிலிருந்து பவளம் சொரிவதுபோல இருந்தது. (கள.நா.14.)

தச்சன் வினைபடு பள்ளி

போர்க்களிறுகள் பகைவருடைய குடைகளை அழித்துப் பலவீரர்களைக் கொன்றன. குடைகளும் உடல் உறுப்புகளும் சிதறிக்கிடக்கின்ற காட்சி, கொல்லன் பட்டறையில் பல்வேறு கருவிகள் அங்குமிங்கும் கிடப்பதுபோல இருந்தது. (கள. நா. 15.)

நெற்றி பிளந்து குருதியொழுக நிமிர்ந்துநிற்கும் யானை, செக்கர் வானத்தில் கருமுகில்போல் காட்சியளித்தது. (கள. நா. 23.) மலையோடு மலை மோதுவதைப் போலக் களிறொடு களிறு போரிட்டன. அக்களிறுகளின்மேல் கட்டியிருந்த கொடிகள் வானத்தைத் துடைப்பனபோலக் காட்சியளித்தன.(கள. நா. 25.) குருதிச்சேற்றில் களிறு செல்லுங்கால் அதன் கால்பதிந்த இடமெல்லாம் பள்ளமாகிவிடுகின்றது. அப்பள்ளத்தில் குருதிநிரம்பித் தோன்றுகின்றது. அக்காட்சி செம்பூக்களைக்கொண்ட அகன்ற சால்களைப்போன்று உள்ளது. (கள. நா. 27.) போரில் அரசனோடு பட்டத்துயானைகள் வெட்டுண்டுகிடந்த காட்சி, சிங்கத்தோடுமலை சிதறுண்டு கிடப்பதை ஒத்திருந்தது.

 Isbn Number: 978-93-91115-47-0

(கள. நா. 35.) வீரர்களின் வேல்பட்டு சாய்ந்து தரையில் விழுந்த களிறு, நிலமகள் மறைகூற அதனைக் கேட்டுக் கொண்டிருத்தலைப்போன்று இருந்தது. (கள. நா. 41.)

போரில் பரந்துகிடந்த குருதியைக் களிறுகள் மிதிப்பதால் குருதி முற்பகல் சேறாகி, பிற்பகலில் பவளப் புழுதியாய் மாறியது. போர்க்களத்தில் களிறுகளின்கீழே கிழிந்த முரசுகள் கிடக்கின்றன. அதனுள்ளே சென்றகுருதி வெளியில் வருகின்றது. அக்காட்சி புதுமழை பொழிந்தவுடன் செங்குளத்தின்நீர் தூம்புவழியாக வெளியில் வருவதைப்போன்று இருந்தது.

ஞாட்பினு ளெஞ்சிய ஞாலஞ்சேர் யானைக்கீழ்
போர்ப்பி லிடிமுரசி னூடுபோ மொன்குருதி
கார்ப்பெயல் பெய்தபிற் செங்குளக் கோட்டுக்கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற புனனாடன்
ஆர்த்தம ரட்ட களத்து. (கள. நா. 2.)

அம்புதைத்தும், வேலால் குத்துப்பட்டும், வாளால் வெட்டப்பட்டும் இறந்த களிறுகள் அடுக்கடுக்காகக் கிடந்தன. அக்காட்சி இடிவிழச் சிதறிய புதர்கள்போல் இருந்தது.(கள. நா. 6.) கரிய களிறுகளின்மீது சிவந்த குருதி படிந்திருப்பது அஞ்சனக்குன்றுகளை நினைவூட்டியது. (கள. நா. 7.) மழைநீர், மலைகளை மடக்கியும் உருட்டியும் வருவதுபோலக் குருதிவெள்ளம் களிறுகளை இழுத்துச் சென்றது. (கள.நா.30.) கடலலை

 Isbn Number: 978-93-91115-47-0

தோணியை இழுத்துச் செல்லுவதைப்போல, முரசொடு களிறுகளைக் குருதிவெள்ளம் இழுத்துச்சென்றது. (களா. நா. 37.)

ஒப்பீடு

அ) இடியொலி கேட்ட நாகங்கள் துடிப்பதைப்போல வெட்டுப்பட்டுத் துண்டான துதிக்கைகள் துடிக்கின்ற செய்தியை முல்லைப்பாட்டினுள்ளும், களவழி நாற்பதினுள்ளும் காணுகின்றோம். போர்க்களிற்றின் துதிக்கையும், பாம்பும் மக்களுக்குத் தீங்கு விளைவிப்பன.

பிடிக்கணம் மறந்தவேழம் வேழத்துப்
பாம்பு பதைப்பன்ன பரூஉக் கைதுமிய...
(முல்லை. 69,70)

என்று முல்லைப்பாட்டு சித்திரித்த செய்தியை

நிரைகதிர் நீளெஃக நீட்டி வயவர்
வரையுரை யானைக்கை நூற – வரைமேல்
உருமொழி பாம்பிற் புரளும் (களா. நா. 13)

என்று களவழி நாற்பதும் சித்திரிக்கின்றது.

ஆ) போரில் உடல்முழுவதும் அம்புகள் தைத்த யானை தரையில் கிடக்கின்றது. அக்காட்சி, மலைகளின்மீது குருவிக்கூட்டம் அமர்ந்திருப்பதைப்போல உள்ளது. இக்காட்சியைப்

Isbn Number: 978-93-91115-47-0

புறநானூறும் களவழி நாற்பதும் ஒரேமாதிரி சித்திரிக்கின்றன.

குன்றத் திறுத்த குரீஇனம் போல

அம்புசென்று இறுத்த வரும்புண் யானை.(புறம். 8)

மலைக்கண்ணே தங்கிய குருவியினம்போல அம்புசென்று தைத்த பொருத்தற்கரிய புண்ணை உடைய யானை என்பது பொருள்

இ) தும்பிக்கை வெட்டுப்பட, விழுந்த யானை நிலத்தை உழுகின்ற கலப்பையைப்போன்று இருந்தது. இதனைப் புறநானூறு,

தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து

நாஞ்சில் ஒப்ப......(புறநா. 19)

என வருணிக்கும். பொய்கையார், களிறுகள் நிலத்திடைக் கொம்புகளைக் குத்திக்கொண்டு வீழ்ந்துகிடக்கும் காட்சி, வெள்ளி உழுபடையால் பூமியை உழுவதைப்போன்று இருந்தது என்கின்றார்.

வெள்ளிவெண் ணாஞ்சிலான் ஞால முழுவனபோல்

எல்லாக் களறு நிலஞ்சேர்ந்த. (கள. நா. 40)

ஈ) திருவள்ளுவர், ‘குன்றேறி யானைப்போர் கண்டற்றால்’ (குறள். 758.) என யானைகள் ஒன்றோடொன்று போரிடும் நிலையை, செல்வம் உடையவர்க்கு உவமையாகக் காட்டுவார்.

Isbn Number: 978-93-91115-47-0

பொய்கையாரும் யானையொடு யானை பொருதுகின்ற காட்சியைப் பாடியுள்ளார். (கள. நா. 25.)

உ) யானைகள் நடக்கும்போது கப்பல் கடலின்மீது ஆடிஅசைந்து செல்வதுபோல இருக்கும். கப்பல் கடலில் செல்லுகின்ற காட்சியையும் யானை நிலத்திலும், குருதி வெள்ளத்திலும் செல்லும் காட்சியையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். மதுரைக்காஞ்சி, நெடுஞ்சுழிப்பட்ட நாவாய் போல (மதுரைக். 379), கந்துநீர் துழிதருங் கடாஅ யானையும்" (மேலது. 383) என இயம்புகின்றது. இதே செய்தியை அகநானூறு,

மீன்கொள் பரதவர் கொடுந்திமில் நளிசுடர்
வான்தோய் புணரி மிசைக்கண் டாங்கு
மெவரத் தோன்றும் யாஅவுயர் நனந்தலை
உயவல் யானை வெரிநுச்சென் நன்ன
கல்லூர் பிழிதரும் புல்சாய் சிறுநெறிச
காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல்" (அகம். 65)

என இயம்புகின்றது.

போரில் குதிரைப்படை, யானைப்படைமீது மோதுகின்ற காட்சி வேங்கைப்புலிகள் குன்றின்மீது பாய்வதைப்போன்று இருந்தது எனப் பொய்கையார் பாடும் செய்தி களவழி நாற்பதுக்கும் முந்தி சங்கப்பாடல்களில் காணப்பெறாதது. பொய்கையார் புனைந்த புதிய வருணனை என்று இதனைக் கூறலாம்.

Isbn Number: 978-93-91115-47-0

பருமம னவிமாக் கடவித் தெரிமறவர்
ஊக்கி யெடுத்த வரத்தி னார்ப்பஞ்சாக்
குஞ்சரக் கும்பத்துப் பாய்வன குன்றிவரும்
வேங்கை யிரும்புலி போன்ற புனனாடன்
வேந்தரை யட்ட களத்து. (கள.நா. 16)

தேரைமுறித்து, தேர் உருளையைச் சுமந்துநிற்கும் யானை பனங்காய்போல் கிடக்கும் வீரர்களுடைய தலைகள்: வெட்டுண்டு மாண்ட வீரர்களின் பிணக்குவியல்போன்ற செய்திகளும் களவழி நாற்பதில் காணப்பெற்றாலும் தேர்ப்படையும் தார்ப்படையும் போரிடுகின்ற காட்சிகள் இடம்பெறவில்லையென்றே சொல்லலாம். தொல்காப்பியர் குறிப்பிட்ட தானைநிலை, யானைநிலை, குதிரைநிலை, தேர்க்குரவை ஆகிய நாற்படைகளும் போரிட்டமுறை புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு ஆகியவற்றினுள் விரிவாகப் பேசப்பட்டிருந்தாலும் களிற்றுப்போரை மட்டுமே விரித்துப்பேசுவதாகக் களவழி நாற்பது அமைந்துள்ளது. நாற்படைகளையும் உடையவர்களாய் மூவேந்தர்களாகிய பெருவேந்தரே இருந்தனர்போலும்.

கொடைப்பண்புமிக்க குறுநில மன்னர்களிடம் யானை, குதிரை, தேர் ஆகியன படைப்பொருளாக மட்டுமன்றிக் கொடைப்பொருளாகவும் விளங்கின: பெருவேந்தர்களைவிடக் குறுநில மன்னர்களே

Isbn Number: 978-93-91115-47-0

யானைகளைக் கொடைப்பொருளாக வழங்கினர் என்று கு.வெ. பாலசுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார். (கு. வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் புறப்பொருள், ப. 95.) பாரியின் பறம்புமலையை முற்றுகையிட்ட மூவேந்தர் மரங்கள்தோறும் களிறுகளைக் கட்டிவைத்திருந்தனர்: வயல்களில் தேர்ப்படைகளை நிறுத்திவைத்திருந்தனர் என அறிகின்றோம். கபிலர் மூவேந்தருக்கும் உரிய களிற்றுப்படையைக் குறிப்பிடுகின்றபொழுது அது அவர்களுக்குப் பெருமிதத்திற்குரியதாக இருக்கலாம்: அவ்வேந்தர் எறிச்செல்வதற்கு ஏற்றதாக இருக்கலாம்: ஆனால் அது அவர்களுடைய செருக்கைக் காட்டுவதாகத் தோன்றுகின்றது என்கிறார். (கு. வெ. பாலசுப்பிரமணியன், மு. நூ., ப. 95.)

யானையைப் போரிட்டுக் கொல்லுதல் புகழுக்குரிய பெரிய வீரச்செயலாகக் கருதப்பட்டது. அவ்வகை எண்ணமே பிற்காலத்தில் கலிங்கத்துப்பரணி போன்ற சிற்றிலக்கியங்கள் தோன்றக் காரணமாயிற்று. களிறு எறிந்து எதிர்ந்தோர்பாடு, களிற்றொடுபட்டவேந்தனை அட்டவேந்தன் வாளோர் ஆடும் அமலை என்றிரு துறைகள் தும்பைத்திணைக்குரியனவாகத் தொல்காப்பியரால் கூறப்படும். புறப்பொருள் வெண்பாமாலை கூறும்

Isbn Number: 978-93-91115-47-0

களிற்றுடனிலைத் துறைக்குரியதாகப் புறநானூற்றில் ஒருபாடல் அமைந்துள்ளது. (புறநா. 307.) களிறு படைப்பொருளாகவும் கொடைப்பொருளாகவும் பதிற்றுப்பத்தில் ஐம்பத்து மூன்று பாடல்களிலும் இடம்பெறக் காணலாம். வேறு எவ்விலங்கும் இவ்வளவு செய்யுளாட்சி பெறவில்லை என்பது கருதத்தக்கதாகும்.

பனைமரு டடக்கையொடு முத்துப்பட முற்றிய
ஊயர்மருப் பேந்திய வரைமரு ணேர்பக
டொளிதிக ழோடை பொலிய மருங்கிற்
படுமணி யிரட்ட வேறிச் செம்மாந்து
செலனசைஇ யுற்றனென் விறன்மிகு குருசில்

(புறம். 161: 16 – 20) என்று குமணனைப் பெருஞ்சித்திரனார் வேண்டி பகடு பெற்றமையைப் புறநானூறு குறிக்கும். மதவலிமிக்க யானையை ஊர்ந்து ஏவற்படுத்திப்போரில் வெற்றி பெறுவதைத் தொல்காப்பியம் துறையமைத்திருக்க அவ்வெற்றியை யானைக்கே உரியதாக்கிப் புறப்பொருள் வெண்பாமாலை யானைமறம், யானைவென்றி ஆகிய துறைகளை வகுத்துள்ளது.

தொல்காப்பிய மரபியலுள் குஞ்சரம், (‘குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை’, தொல். 1518.) வேழம், களிறு, (‘வேழக் குரித்தே விதந்து களிறு என்றல்’, தொல். 1533.) வார்கோட்டு யானை, (‘வார்கோட்டு யானையும்

Isbn Number: 978-93-91115-47-0

பன்றியும் அன்ன’, தொல். 1536.) பிடி (‘பிடிஎன் பெண்பெயர் யானை மேற்றே’, தொல். 1551.) ஆகிய சொற்கள் ஆளப்பட்டு உள்ளன. அவற்றுள் யானை என்பது ஆண்பாலையும் பெண்பாலையும் குறிக்கின்ற பொதுச்சொல்லாகும். பிடி, யானையுள் பெண்பாலைக் குறிக்கின்ற சொல்லாகும். வேழமும் களிறும் ஆண்பாலைக் குறிக்கின்ற பெயசெற்களாகும். குஞ்சரம் யானைக்குட்டியைக் குறிக்கின்ற சொல்லெனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். களவழி நாற்பதில் வேழம், (கள. நா. 12.) களிறு(கள. நா. 10.) ஆகிய சொற்கள் ஆண்யானையைக் குறிக்கின்ற இலக்கிய வழக்கில் ஆளப்பட்டுள்ளன. யானை என்ற சொல் ஆண்யானையைக் குறிப்பதாகவே அமைந்துள்ளது. தொல்காப்பியர் காலத்தில் யானைக்குட்டியைக் குறித்த ‘குஞ்சரம்’ என்ற சொல், ஆண்யானையைக் குறிப்பதாகக் களவழி நாற்பதில் காணுகின்றோம்.

தொல்காப்பியம், குஞ்சரம் பெறுமே குழவிப்பெயர்க் கொடை (தொல். 1518) என்று வகுத்துக்காட்டிய இலக்கியமரபு, களவழி நாற்பதில் மாற்றம் பெற்றுள்ளதைக் காட்டுகின்றது. ‘குஞ்சர ஒழுகை பூட்டி வெந்திறல்’ (பதிற். ஐந்தாம் பத்து பதிகம்.) எனவரும் பதிற்றுப்பத்தின் பதிகம் கூறுவதும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

Isbn Number: 978-93-91115-47-0

அரசர்க்குரிய படைவகை, படைக்கலன்கள் ஆகியவை பற்றியும் வணிகர், வேளாளர் ஆகியோருக்குரிய படைகள் பற்றியும் குறுநில மன்னர்களுக்குரிய படைகள் பற்றியும் தொல்காப்பியர் மரபியலுள் கூறியுள்ளார். நால்வகைப்படையும், தனக்கென ஒரு கொடியும், வெண்கொற்றக் குடையும், முரசும், தனக்கென ஒரு மாலையும், தலையில் அணியும் மகுடமும்,அரியணையும், அரண்களும், செங்கோல் தாங்கிய பேரரசனுக்கு உரியவை ஆகும்.

பொய்கையார் கழுமலப் போரில் நால்வகைப் படையும் போரிட்ட களக்காட்சிகளை முழுவதும் பாடாமல் களிற்றுப்போர், களிறு பட்டுக்கிடக்கின்ற நிலை ஆகியவற்றை மட்டும் விரித்துப் பாடியுள்ளார். சேரவேந்தர்கள் மிகப்பெரிய களிற்றுப்படைகளை வைத்திருந்தனர் என்றும், களிற்றுப்படை அவர்களுடைய வெற்றிக்குக் காரணமாக இருந்தது என்ற உண்மையும் பதிற்றுப்பத்தால் பெறப்படுகின்றது: என்றாலும் மிகப்பெரிய களிற்றுப்படையினை வைத்திருந்த சேரமான் கணைக்காலிரும்பொறை, சோழன் கோச் செங்கணானிடம் தோற்றுப்போனான் என்றசெய்தி வியப்பை அளிக்கின்றது. சோழன் கோச் செங்கணானிடம் மறவர்படை, வெற்றிக்குக் காரணமாக அமையும் களிற்றுப்படையினைக் குறிவைத்து வீழ்த்தி

Isbn Number: 978-93-91115-47-0

வெற்றிபெற்றுள்ளது. போர் உத்தியைக் கையாளுவதில் சோழன் கோச் செங்கணான் தேர்ச்சி பெற்றிருந்தான் எனத் தெரிகின்றது. இந்திய வரலாற்றில் இருபதினாயிரம் களிறுகளைக்கொண்ட படையினை வைத்திருந்த புருசோத்தமன், மாவீரன் அலெக்சாண்டரிடம் தோற்றுப்போனான் எனப் படிக்கின்றோம். முதலாவது பானிப்பட்டுப்போரில் மிகப்பெரிய யானைப்படையை வைத்திருந்த இப்ராஹிம் லோடி, பாபரிடம் தோற்றுப்போனான் என அறிகின்றோம். ஜீலம் நதிக்கரையில் சேற்றில் சிக்குண்ட புருசோத்துமனுடைய யானைப்படையை எளிதில் வீழ்த்தினான் அலெக்சாண்டர். பானிப்பட்டுப்போரில் பீரங்கிகளை வெடிக்கச்செய்து இப்ராஹிம் லோடியின் யானைப்படையை நிலைகுலையச் செய்தான் பாபர். போர்த்திறம், பயன்படுத்தும் படைக்கலன் ஆகியவற்றால் அயலார் இந்த நாட்டைப்பிடித்த வரலாற்று உண்மை இதனால் விளங்கும். அதுபோலச் சோழன் கோச் செங்கணான் போர்த்திறம் மிக்கவனாக இருந்தமையால் சேரமான் கணைக்காலிரும்பொறையின் யானைப்படையை அழித்து வெற்றிகண்டான் என்ற உண்மையைக் களவழி நாற்பதின்மூலம் தெளிகின்றோம்.

குறுநில மன்னர்களுக்குக் களிற்றுப்படை உரித்தாக இருந்தது என்று சொல்லுவதற்குச் சான்றுகள்

 Isbn Number: 978-93-91115-47-0

இல்லை. வில், வேல், வீரக்கழல், தலைக்கண்ணி, தார், ஆரம், தேர், வாள் ஆகியன் மட்டும் குறுநிலமன்னர்க்கு உரியவை என்பார் தொல்காப்பியர்.

வீல்லும் வேலும் கழலும் கண்ணியும்
தாரும் மாலையும் தேரும் வாளும்
மன்பெறு மரபின் ஏனோர்க்கும் உரிய. (தொல். 1583)

இரண்டு மலைகள் மோதிக்கொள்வது போலச் சோழன் கோச் செங்கணான் களிற்றுப்படையும் சேரமான் கணைக்காலிரும்பொறையின் களிற்றுப்படையும் மோதின எனப் பொய்கையார் பாடியுள்ளார். யானைமேல் யானை நெரிதர (கள. நா. 8) எனவரும் தொடரால் இதனை அறியலாம்.

களிற்றுப்படை, காலாட்படை ஆகிய இரண்டு படைகளையும் கையாண்ட திறத்தினால் சோழன் வென்றான் எனத் தெரிகின்றது. எதிரியின் யானைப்படைப் பாகர்களை முதலில் சோழன் அழித்தான் என்னும் குறிப்பு, இதனை மெய்ப்பிக்கின்றது.

கணைஅலைக்(கு) ஒல்கிய யானை – துணையிலவாய்த்
தொல்வழி ஆற்றித் துளங்கின. (கள. நா. 21)

வீரநிலை காலப் பண்பாட்டின் வளர்ச்சி, ‘வாழ்நாள் சிறியது: ‘வளர்புகழ் நெடியது’’ என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்தது என்றும்

 Isbn Number: 978-93-91115-47-0

அக்கொள்கை புறநானூற்றின்வழி அறியப்படுகின்றது என்றும் கதிர். மகாதேவன் குறிப்பிடுகின்றார்.53 (கதிர். மகாதேவன், பழந்தமிழர் வீரப்பண்பாடு, ப. 3.) அவர், தம் கருத்துக்கு அரண்சேர்க்கின்றவகையில் பின்வரும் இரண்டு புறநானூற்றுப் பாடல்களையும் எடுத்துக்காட்டுகின்றார்.

வெற்றிகண்ட சோழன் கோச் செங்கணான் புகழ்ப் பெற்றான். தோற்ற சேரமான் கணைக்காலிரும்பொறை இகழ்ச்சி அடைந்தான். யானைப்படை திறமம் ஒருவனுடைய புகழுக்குக் காரணமாக அமைந்தது போலவே, அதன் பலவீனம் ஒருவனுக்கு அவமானத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

யானைஇல் மன்னன்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய இன்னா நாற்பது, யானைப்படை இல்லாத மன்னனைக் காண்பது மிகவும் துன்பமாகும் என்று இயம்புகின்றது.

“யானையின் மன்னரைக் காண்ட னனியின்னா.” (இன். நா. 22.)

‘இனியவை நாற்பது’ யானைப்படையை உடைய அரசனைக் காணுதல் இனிது என்றும் அதனை ஒரு நன்நிமித்தம் என்றும் இயம்புகின்றது. யானைப்படையை உடைய அரசனைக் காண்பது நற்பேறு என்றும் இயம்புகின்றது. “யானை யுடைய படைகாண்டல்

Isbn Number: 978-93-91115-47-0

முன்இனிதே.” (இனி. நா. 4) திருக்குறள், இன்னா நாற்பது, இனியவை நாற்பது போன்ற நீதிநூற்கள் கூட களிற்றுப் படையின் இன்றியமையாமையை வலியுறுத்தியுள்ளன.

முடிபுகள்

கழுமலப்போரில் சோழன் கோச் செங்கணான் வெற்றிபெற்றதற்கு அவனுடைய களிற்றுப்படை காரணமாக அமைந்தது. சோழன் கோச் செங்கணான் படைநடத்தவதில் சேரமான் கணைக்காலிரும் பொறையைவிடத் திறன்பெற்றவனாக விளங்கினான். அம்புபட்டுக் குன்றுபோல் கிடந்த யானை, செம்மண் குன்றுபோல் காட்சியளிக்கும் யானை, துதிக்கை இழந்த யானை, வீரர் எயய்த வேல்தாங்கி முக்கொம்புடையதுபோலத் தோன்றும் யானை, நிலத்தை உழுகின்ற உழவாரப்படைபோல் கிடந்த யானை, தரையில் செவிசாய்த்துக் கிடந்த யானை எனவரும் வருணனைகள் தோல்வியுற்ற படைளைக் குறிக்கின்றன.

யானை என்ற பொதுச்சொல்லையும் ஆண்யானையைக் குறிக்கும் களிறு, வேழம் என்ற சொற்களையும் பொய்கையார் கையாண்டுள்ளார். அவருடைய மொழிநடையில் யானை என வழங்குகின்ற இடங்களிலெல்லாம் ஆண்யானை என்று பொருள்கொள்ளுவதே பொருத்தமாகும். களிற்றுப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகிய

Isbn Number: 978-93-91115-47-0

நான்குவகையான படைகளுள் களிற்றுப்படையின் போர்முறையை வியந்துபாடி கழுமலப்போரில் சோழன் கோச் செங்கணான் வெற்றிபெற்றதைச் சிறப்பித்துள்ளார் பொய்கையார். எதிரியின் களிற்றுப்படையை அழிக்கும் தந்திரம் சோழன் கோச் செங்கணாவின் காலாட்படைக்கு இருந்தது என அறிகின்றோம். ஆனால் நேரடியாக காலாட்படையின் வீரம் பேசப்படவில்லை.

தொல்காப்பியப் புறத்திணையியலிலும் மரபியலிலும் சுட்டப்பட்ட நால்வகைப்படைகளையும் பற்றிய செய்திகளைப் பாடாமல் களிற்றுப்போர், களிற்றுப்படையின் அழிவு ஆகியவற்றை மட்டுமே பிரதானமாகப் பாடியுள்ளார் பொய்கையார். களவழி நாற்பது, கலிங்கத்துப்பரணிக்கு முன்னோடியாக அமைந்த இலக்கியமாகும். காவிரிநாடன் தெவ்வரை அட்டகளமாகிய கழுமலப்போர் களிற்றுப்போரினால் ஒருவனுடைய வெற்றி, தோல்வி நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சியாக விளங்குகின்றது.

துணைநூற் பட்டியல்

[1] இளம்பூரணர் (உரை ஆ.), *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* கழக வெளியீடு, சென்னை, 1969.
[2] சாமிநாதையர், உ.வே. *பத்துப்பாட்டு மூலமும்*

 Isbn Number: 978-93-91115-47-0

நச்சினார்க்கினியர் உரையும், உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, 1974.

[3] சாமிநாதையர், உ.வே. *புறநானூறு மூலமும் உரையும்.* தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1963.

[4] சோமசுந்தரனார், பொ.வே. *நற்றிணை (நாராயணசாமி ஐயர் உரையும்).* கழக வெளியீடு, சென்னை, 1967.

[5] துரைசாமிப்பிள்ளை,சு. *பதிற்றுப்பத்து.* கழக வெளியீடு, சென்னை, 1968.

[6] துரைசாமிப்பிள்ளை,சு. *புறநானூறு.* கழக வெளியீடு, சென்னை, 1970.

[7] பாலசுப்பிரமணியன், கு.வெ., *சங்க இலக்கியத்தில் புறப்பொருள்.* மீரா பதிப்பகம், புதுக்கோட்டை, 1986.

[8] மகாதேவ முதலியார், வா. *இனியவை நாற்பது.* கழக வெளியீடு, சென்னை, 1965.

[9] மகாதேவன், கதிர். *பழந்தமிழர் வீரப்பண்பாடு.* எரக வெளியீடு, மதுரை,1980.

[10] வேங்கடசாமி நாட்டார், ந.மு. *இன்னா நாற்பது.* கழக வெளியீடு, சென்னை,1973.

[11] வேங்கடசாமி நாட்டார், ந.மு. *களவழி நாற்பது.* கழக வெளியீடு, சென்னை,1970.

 Isbn Number: 978-93-91115-47-0

Veeman's heroism in *Villibharatham*

Dr D. Maheswari, Editor, IJTLLS, Virudhunagar, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-4187-0120
DOI: 10.5281/zenodo.5599256

Abstract

The "Mahabharata" and the "Ramayana" are the great epics that arose to regulate human life. Both cover much of the war. Although there are many Indian texts, Villiputhura's "Villibharatham" is highly regarded by all as special. Veeman's heroic deeds are shown with his power and valour in "Villibharatham". Mannasai (Land), Ponnasai (Gold) and Pennasai (Woman) will cause great suffering if anyone get addict to these three. It is because of such greed Duryodhana did voluptous deeds that hurt an innocent woman (Draupathi) and is destroyed by her hands. The vow of Veeman and the victorious deeds to cleanse the suffering of Draupadi speaks of Veeman's heroism. The purpose of the study is to explore the heroic events of Veeman killing of the giant Idimban, Bagan, Pundarigan, Maniman, Mallan, Keesakan, Upakisakars, Duryodhana and all of his brothers at war.

Keywords: Veeman, Heroism, *Villibharatham*, War Victory.

References

[1] V .M. Gopalakrishnanumachariyar.*Villiputhurar Villiparatham*. Uma Publishing, Chennai - 600001, 2013.

[2] Swami. *Mahabharata Arasiyal*. Anuragam, Chennai-600017, 2005.

[3] N. Subburettiyar. Panchali *Sabtham – oru Nooku. Sarvothaya Illakia Pannai*, Madurai, 1982.

[4] S. Thandapani Thesigar. Thirukkural Uraikkalanciayam. Madurai Kamarajar University, Madurai, 1981.

[5] P. Palaniappan, Kalingathupparani Kuripuraigal. Kalaga Velietu, Chennai, 1965.

[6] M. Shanmugam Pillai. *Pathinen Kelganakgu Telivurai, Mullai Nilayam*, 1982.

[7] Puliyrgesigan Puraporul Venbamalai. Saratha Pathipagam, Chennai, 2009.

Isbn Number: 978-93-91115-47-0

வில்லிபாரதத்தில் வீமனின் வீரம்

முனைவர் த.மகேஸ்வரி, பதிப்பாசிரியர், தமிழ்மொழி மற்றும்
இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-4187-0120
DOI: 10.5281/zenodo.5599256

ஆய்வுச்சுருக்கம்

மகாபாரதமும் இராமாயணமும் மனித வாழ்க்கையை நெறிப்படுத்த எழுந்த மாபெரும் காவியங்களாகும். இவ்விரண்டும் போர் சார்ந்த பெரும்பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. பாரத நூல்கள் பல உருவாயினும் வில்லிபுத்தூராரின் வில்லிபாரதமே சிறப்பிற்குரியதாய் அனைவராலும் போற்றப்படுகிறது. வில்லிபாரதத்தில் வீமனின் வீரதீரப் போர் செயல்கள் அதிகம் காணப்படுகின்றன. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை இம்மூன்றும் யாராயினும் மேற்கொண்டால் பெரும் துன்பத்தையே அடைவர். துரியோதனனும் இவற்றை மேற்கொண்டதனால் தான் வீமன் கைகளினால் அழிந்து விடுகிறான். துரியோதனனால் திரௌபதி அடைந்த துன்பத்தை நீக்க வீமனிட்ட வீரசபதமும் அதில் வெற்றி பெற்ற செயல்களும் வீமனின் வீரத்தைப் பறைசாற்றுகின்றன. இடிம்பன், பகன், புண்டரீகன், மணிமான், மல்லன்,

 Isbn Number: 978-93-91115-47-0

கீசகன் மற்றும் உபகீசகர்கள் போன்றோருடன் பல்வேறு சூழல்களில் போரிட்டு வெற்றி பெற்ற நிகழ்வுகளையும் துரியோதனன் அவன் தம்பிமார்கள் அனைவரையும் கொன்ற விதத்தினையும் ஆராய்ந்து வீமனின் வீரத்தை எடுத்துரைப்பதே ஆய்வு நோக்கமாகும்.

கலைச்சொற்கள்: வீமன், வீரம், வில்லிபாரதம், போர், வெற்றி.

முன்னுரை

அரிதரிது மானிடராக பிறப்பது அரிது என்பது அவ்வையின் வாக்கு. மானிடராய் பிறந்து இம்மையில் முன்னோர்களின் தர்ம வழியைக் கடைபிடித்து மறுமையில் நன்மை அடைய வேண்டும் என்பதே இதன் விளக்கமாகும். இதனையே வேதங்களும் மறை பொருளாய் கூறுகின்றன. வேதங்களின் உட்பொருளை மானிடர் அனைவரும் அறிவது கடினம். ஏனென்றால், அவை சித்தாந்தங்களாகவும் தத்துவங்களாகவும் அமைந்துள்ளன. மனித வாழ்க்கையில் தோன்றக்கூடிய இன்ப துன்பங்கள், தவறான வழியில் செல்வதால் வரக்கூடிய இழப்புகள், துன்பங்களைச் சரிசெய்து வெற்றியடைவதற்கான தர்மவழிகள், மரணமில்லாப் பெருவாழ்வு மற்றும் இறைநிலை ஆகிய உயர்ந்த

Isbn Number: 978-93-91115-47-0

பண்புகளை நடைமுறை நிகழ்வுகள் மூலம் எடுத்துக் காட்டுவதினால் காவியங்கள் எக்காலத்திலும் புகழ் பெற்று காட்சித் தருகின்றன.

மாபெரும் காவியமான மகாபாரதம் 'தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் இறுதியில் தருமம் வெல்லும்' என்ற நியதியைத் தெளிவுற உணர்த்துகின்றது. இக்காவியம் மனித வாழ்க்கைக்கு ஒரு நல்வழிகாட்டியாகும். மகாபாரதம் மட்டுமல்ல பாரதம் பற்றிய நூல்கள் பல உள்ளன. அதன் வரிசையில் தமிழ் இலக்கியத்தில் பாரதத்தின் பெருமையைப் போற்றும் முதல்நூல் வில்லிபாரதம் ஆகும். மேலும், கௌரவர்கள் அழிந்து தர்மம் திரௌபதிக்கு நிலை நாட்டப் பட்டதை எடுத்தியம்புகின்ற வில்லிபாரதக் கதைப் போற்றுதலுக்கு உரியது. இச்சிறப்பிற்குரிய வில்லிபாரதத்தில் திரௌபதிக்குத் தர்மம் நிலைநாட்டப்பட்டதில் முக்கிய பங்காற்றிய வீமனின் வீரதீரப்போர் செயல்களை ஆராய்வதே இப்புத்தகப்பகுதி ஆய்வக்கட்டுரையின் முதன்மை ஆய்வு நோக்கமாகும்.

வில்லிபுத்தூரார்

திருமுனைப்பாடி நாட்டின் சனியூரில் வைசுணவ சமயத்தில் அந்தணர் குலத்தில் வீரராகவாச்சாரியார் என்பவருக்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பு வில்லிபுத்தூரார் பிறந்திருந்த செய்தியினை, *தாரகாயன*

Isbn Number: 978-93-91115-47-0

வண்டலை தண்டலைச் சனியூர் வீரராக வனருள்பெறு வில்லிபுத்தூரன் (வில். சிற.பா.17) என்னும் சிறப்புப்பாயிர பாடல்வரிகள் எடுத்துரைக்கின்றன. வில்லிபுத்தூராரும் அருணகிரிநாதரும் ஒரே காலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. காரணம் வில்லிபாரதமும், அருணகிரி நாதரின் திருப்புகழும் இரண்டாம் நூற்றாண்டு காலத்து நூல்களாக இருப்பதால் இருநூல்களின் ஆசிரியரும் ஒரே காலகட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணப்படுகிறது. இவர்கள் காலத்திலேயே தமிழ் நாட்டில் வட மொழியும், கன்னட மொழியும் மற்றும் தெலுங்கு மொழியும் தமிழில் மிகுதியாக கலந்து இருந்துள்ளது.

மேலும், தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கக்கூடிய அரசரோ, பிரபுக்களோ மிகுதியாக இல்லை. தமிழ்மொழி அழிந்து விடுமோ என்ற அச்சம் நிலவிய காலத்தில் தமிழ் அரசனான வரபதியாட்கொண்டான் வில்லிபுத்தூராரிடம் தம் இருவரின் புகழ் பூமியில் நெடுங்காலம் நிலைத்து நிற்கும்படி வடமொழியில் வியாசமுனிவர் அருளிய மகாபாரதத்தைப் போன்று செந்தமிழில் இனிய செய்யுட்களைக் கொண்டு பாரதம் பாட வேண்டும் என்று வேண்டியுள்ளான். மன்னனின் வேண்டுதலுக்கு இணங்கி வில்லிபுத்தூராரும் சொற்சுவையும், பொருட்சுவையும் கூடி விளங்கும்படி சீரிய நடையில் வில்லிபாரதத்தைப்

Isbn Number: 978-93-91115-47-0

பாடியருளியுள்ளார். இந்நிகழ்வினை மெய்ப்பிக்கும்படி வில்லிபுத்தூராருடைய திருமகனாரான வரந்தருவார்,

நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று
நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார
தஞ்சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக வங்கூரெ
ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு
கூர்வாமரோ (வில்.தற்.பா.1)

என்று வில்லிபாரத தற்சிறப்பப்பாயிரப் பாடல்வரிகளில் பாடியுள்ளார். வில்லிபுத்தூரரும் வரபதியாட் கொண்டானை வில்லிபாரதச் சிறப்பு கதாபாத்திரங்களான கன்னன், தருமன், அருச்சுனன் போன்றோர் வாயிலாகப் புகழ்ந்து பேசியுள்ளார். மேற்கண்ட வில்லிபாரத சிறப்புப்பாயிர மற்றும் தற்சிறப்புப்பாயிர செய்திகள் மூலமாக வில்லிபுத்தூரார் குறிப்புகளையும், வில்லிபாரதத்தை இயற்றிய காரணத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது.

வில்லிபாரதப் பருவங்கள்

1. ஆதி பருவம்

ஆதி பருவம் - 798 பாடல்கள்		
வ.எண்	சருக்கங்கள்	பாடல்கள்

Isbn Number: 978-93-91115-47-0

1.	குருகுலச் சருக்கம்	147
2.	சம்பவச் சருக்கம்	119
3.	வாராணவதச் சருக்கம்	136
4.	வேத்திரகீயச் சருக்கம்	65
5.	திரௌபதி மாலையிட்டச் சருக்கம்	109
6.	இந்திரப்பிரத்தச் சருக்கம்	47
7.	அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்	90
8.	காண்டவதகனச் சருக்கம்	77

2. சபா பருவம்

சபா பருவம் - 437 பாடல்கள்		
வ.எண்	சருக்கங்கள்	பாடல்கள்
1.	இராயசூயச் சருக்கம்	153
2.	சூதுபோர்ச் சருக்கம்	284

3. ஆரணிய பருவம்

ஆரணிய பருவம் - 723 பாடல்கள்		
வ.எண்	சருக்கங்கள்	பாடல்கள்
1.	அருச்சுனன் தவநிலைச் சருக்கம்	176

Isbn Number: 978-93-91115-47-0

2.	நிவாதகவசர் காலகேயர்வதைச் சருக்கம்	161
3.	புட்பயாத்திரைச் சருக்கம்	139
4.	சடாசுரன் வதைச் சருக்கம்	26
5.	மணிமான் வதைச் சருக்கம்	112
6.	துருவாசமுனிச் சருக்கம்	17
7.	பழம்பொருந்து சருக்கம்	23
8.	நச்சுப்பொய்கைச் சருக்கம்	69

4. விராட பருவம்

விராட பருவம் - 330 பாடல்கள்		
வ.எண்	சருக்கங்கள்	பாடல்கள்
1.	நாடுகரந்துறைச் சருக்கம்	38
2.	மற்போர்ச் சருக்கம்	14
3.	கீசகன் வதைச் சருக்கம்	107
4.	நிரைமீட்சிச் சருக்கம்	141
5.	வெளிப்பாட்டுச் சருக்கம்	30

5. உத்யோக பருவம்

உத்யோக பருவம் - 395 பாடல்கள்		
வ.எண்	சருக்கங்கள்	பாடல்கள்
1.	உலூகன் தூது சருக்கம்	21

Isbn Number: 978-93-91115-47-0

2.	வாசுதேவனைப் படைத் துணையழைத்த சருக்கம்	20
3.	சஞ்சயன் தூது சருக்கம்	19
4.	கிருட்டிணன் தூது சருக்கம்	264
5.	படையெழுச்சிச் சருக்கம்	24
6.	முகூர்த்தவேள்விச் சருக்கம்	5
7.	களப்பலியூட்டுச் சருக்கம்	8
8.	அணிவகுப்புச் சருக்கம்	34

6. வீட்டும பருவம்

வீட்டும பருவம் - 377 பாடல்கள்		
வ.எண்	சருக்கங்கள்	பாடல்கள்
1.	முதற் போர்ச்சருக்கம்	77
2.	இரண்டாம் போர்ச்சருக்கம்	32
3.	மூன்றாம் போர்ச்சருக்கம்	30
4.	நான்காம் போர்ச்சருக்கம்	42
5.	ஐந்தாம் போர்ச்சருக்கம்	25
6.	ஆறாம் போர்ச்சருக்கம்	28
7.	ஏழாம் போர்ச்சருக்கம்	10
8.	எட்டாம் போர்ச்சருக்கம்	39
9.	ஒன்பதாம் போர்ச்சருக்கம்	41
10.	பத்தாம் போர்ச்சருக்கம்	31

Isbn Number: 978-93-91115-47-0

7. துரோண பருவம்

துரோண பருவம் - 667 பாடல்கள்		
வ.எண்	சருக்கங்கள்	பாடல்கள்
1.	பதினோராம் போர்ச்சருக்கம்	45
2.	பன்னிரண்டாம் போர்ச்சருக்கம்	93
3.	பதின்மூன்றாம் போர்ச்சருக்கம்	259
4.	பதினான்காம் போர்ச்சருக்கம்	220
5.	பதினைந்தாம் போர்ச்சருக்கம்	50

8. கன்ன பருவம்

கன்ன பருவம் - 360 பாடல்கள்		
வ.எண்	சருக்கங்கள்	பாடல்கள்
1.	பதினாறாம் போர்ச்சருக்கம்	91
2.	பதினேழாம் போர்ச்சருக்கம்	269

9. சல்லிய பருவம்

சல்லிய பருவம் - 204 பாடல்கள்		
வ.எண்	சருக்கங்கள்	பாடல்கள்
1.	பதினெட்டாம் போர்ச்சருக்கம்	204

10. சௌப்திக பருவம்

சௌப்திக பருவம் - 46 பாடல்கள்

Isbn Number: 978-93-91115-47-0

வ.எண்	சருக்கங்கள்	பாடல்கள்
1.	பதினெட்டாம் போர்ச்சருக்கம்	46

மேற்கண்ட பத்துப் பருவங்களையும் எழுதிய வில்லிபுத்தூரார் அசுவத்தாமனின் அவலநிலை, பாண்டவர்களின் இறப்பு, கிருட்டிணனின் மறைவு ஆகியவற்றை விளக்கிப் பாடிட விரும்பாத காரணத்தினால் பின் ஏனைய பருவங்களைப் பாடாமல் வில்லிபாரதத்தை முடித்துள்ளார் எனும் செய்தி நிலவிவருகிறது.

வீமன் பிறப்பு

பாண்டுவிற்கும் குந்திக்கும் ஆண்மானை வாகனமாகவுடைய வாயுதேவனின் அருளால் சிறந்த முகூர்த்தத்தில் அழகிய தோள்வலிமையுடைய அனுமனை உவமிக்கும் அளவு பெரும் வலிமையுடைய வீமன் பிறந்தவன்.

…சிறந்ததோர் முகூர்த்தந்தன்னில்
அஞ்சனையளித்தபொற்றோள னுமனேயுவமையென்ன
வெஞ்சினவீமன்றன்னைப் பயந்தனள்விரதமிக்காள்.
(வில்.ஆதி.சம்.பா.76)

வீமன் பிறப்பை வில்லிபாரதப் பாடல்வரிகள் காட்சிப்படுத்துகின்றன. வீமன் சிங்கக் கொடியுடைய பதினாராயிரம் யானைகளின் பலம் கொண்டவன்.

Isbn Number: 978-93-91115-47-0

கொடுஞ்சினம் உடையவன். மயன் எனும் அசுரத்தச்சனிடம் கதாயதம் பெற்றவன். வீமன் தோளில் விற்குறியுடையவன். சிறுவயது முதலே வீமன் துரியோதனனிடையே பகைமையோடு வளர்ந்து வந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

வீமனின் வீரசபதம்

பாஞ்சாலிக் கரசவையிற் பழுதுரைத்
தோனுடலெனது படையாமேழி
போஞ்சாலி னிணஞ்சொரியத் துணைவரொடு
குலமாளப் பொருவேன்யானே

(வில்.சபா.சூது.பா.256)

எனும் வில்லிபாரத சபாபருவச் சூதுபோர்ச் சருக்கப் பாடல் வரிகள் வீமனின் வீரசபதத்திற்குச் சாட்சியாகின்றன.

சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. (குறள் - 777)

சூழ்ந்து பரவிடும் புகழை மட்டுமே விரும்பி உயிரைப் பற்றிக் கவலைப்படாத வீரர்களின் காலில் கட்டப்படும் வீரக்கழல் தனிப்பெருமை உடையதாகும். அத்தகைய வீரக்கழலை அணிந்த வீமன் துரியோதனனை அழிப்பேன் என்று வீரசபதமிடுகிறான்.

இராஜசபையில் சூதாட்டத்தின் போது திரௌபதியைத் தன்மடி மீது இருத்துமாறு

 Isbn Number: 978-93-91115-47-0

துரியோதனன், துச்சாதனனுக்குக் கட்டளையிட, துச்சாதனன் திரௌபதியைத் துன்பப்படுத்தி துகிலுரித்த போது, வீமன் கடாரத்திற் காய்கிற நறுமணமுள்ள நெய்போல செந்நிறமான நெருப்பு மூண்டு எரியும் சூழல் நிகழ்வதினால் பெருங்கோபம் கொண்டான். அச்சமயம் அரசவையில் கூடியுள்ள அழகிய நாடுகளை ஆட்சி புரியும் அனைத்து அரசர்களையும் நோக்கி, இராஜசபையில் திரௌபதியை அவமானப்படுத்திய துரியோதனன் உடம்பிலே, எனது ஆயுதமாகிய கலப்பை பிளந்து செல்லுகின்ற வழியில் கொழுப்புகள் வழியும் படிச் வீரச்செயல் செய்வேன் என்றும், துச்சாதனன் உடம்பினின்று பெருகுகின்ற இரத்த நீர்ப்பெருக்கைக் குடிக்கும் வரை கைகளால் நீரைப் பருக மாட்டேன் என்றும், பின்னர் திருதராட்டிரரது வம்சம் அழியுமாறு அவனது தம்பியர் அனைவரையும் யான் ஒருவனே அழிப்பேன் என்று வீரசபதமிட்டான். இவ்வீரச்சபதமே வீமன் பெரும்போர் புரிய அடித்தளமாயிற்று.

வீமன் - இடிம்பன், பகன் போர்

பாண்டவர்களை அழிப்பதற்கு துரியோதனன் ஏற்படுத்திய அரக்கு மாளிகையிலிருந்து வீமன் தப்பித்து தாயையும், தன் உடன் பிறந்தவர்களையும் சுரங்க வழியாக அழைத்து வந்து வனம் சேர்ந்த போது இடிம்பன் எனும் அரக்கனுடன் போர் புரியும் சூழல் உருவாயிற்று.

Isbn Number: 978-93-91115-47-0

இடிம்ப அரக்க அரசன் ‘மனிதர்களைக் கொன்று கொணர்ந்து வா’ என்று தங்கையான இடிம்பியை அனுப்ப அவள் வீமனைக் கண்டவுடன் காதல் மோகம் கொள்கிறாள். அதனை அறிந்து இடிம்பன் கோபம் கொண்டு கடும் சொற்கூறி வீமனுடன் வலிய போர் தொடங்க முயல்கிறான். வீமன் தனது வீரத்தினால் இடிம்பனை மாய்க்கிறான்.

வேத்திரகீய நகரில் பகன் எனும் அரக்கன் அவ்வூர் மக்களிடம் வீட்டிற்கு ஒரு வண்டிச்சோறும், ஓர் ஆளையும் உட்கொண்டு துன்பப்படுத்திக் கொண்டிருந்தான். அச்சமயம் பாண்டவர்கள் அந்தண வடிவம் கொண்டு அங்கிருந்தனர். வீமன், பார்ப்பினி பெண்ணுக்காக தான் பகனுக்கு உணவாகிறேன் என்று கூறி வண்டிச் சோற்றுடன் செல்கிறான். வீமன், தாமதமாகச் சென்று வண்டிச்சோறு முழுவதையும் உண்டு, பகனைக் கோபப்படுத்தி, பகனோடு மற்போர் செய்து தனது பலத்தினை மெய்ப்பித்துக் காட்டும் விதத்தில் பகன் என்னும் அரக்கனை அழிக்கிறான். இந்நிகழ்வினை,

இடிம்பனைப் பகனை வைவே லிகற்சரா
சந்தன் றன்னை
நெடும்பணைப் புயத்தால் வென்ற நிகரிலா
வீமனிற்க (வில்.சபா.சூது.பா.22)

 Isbn Number: 978-93-91115-47-0

எனும் சபா பருவம் சூதுபோர்ச் சருக்கப் பாடல் வரிகள் வலுப்படுத்துகின்றன.

புண்டரீகன், மல்லன், கீசகன் - போர்

வில்லிபாரத ஆரணிய பருவம் புட்ப யாத்திரைச் சருக்கத்தில் வீமன், திரௌபதி விரும்பிய மலரைக் கொணர குபேரனின் அளகாபுரியை அடைய, காவல் புரிந்த அரக்கன் புண்டரீகன் மற்றும் சேனாதிபதி மணிமான் இருவரோடும் பொருதி அவர்களை வீழ்த்தி மலரைக் கொணர்ந்து வெற்றி பெற்றுள்ளான்.

வீமன் விராட நாட்டில் பலாயனனாக இருந்த போது மல்லன் என்ற வீரனை மற்போர் செய்து வீழ்த்தியுள்ளான். கீசகன் திரௌபதியின் மீது இச்சைக் கொண்டு துன்பம் விளைவித்த போது கீசகனையும், உபகீசகர்களையும் அழித்துள்ளான். மேற்கண்ட புண்டரீகன், மல்லன், கீசகன் எனும் மூவர்களுடனும் போரிட்டு வெற்றி பெற்ற செய்தியில் இருந்தும் வீமனின் வீரத்தை அறியலாம்.

பாரதப்போர் - முதல்நாள் போர்

பாரதப் போரின் முதல் நாளில் வீமன், வீடுமனோடு போரிட்டு சகுனி முதலானவர்களைப் தோல்வியடையச் செய்தான். அவர்கள் பின்னடைந்து, துரியோதனன் வர வீமன் பெருஞ்சினம் கொண்டு

Isbn Number: 978-93-91115-47-0

மேருமலை போல் அவனை வளைத்து சண்டையிட ஆரம்பித்தான்.

இரண்டாம் நாள் போர்

கதிக்கடுந் தேரினின் றிழிந்து காலிங்கன்
மதிக்குமும் மதகரி வந்த யாவையுந்
துதிக்கைவன் கரங்களாற் சுற்றி யெற்றினான்
(வில்.வீட்டும.2ம்போர்.பா.13)

எனும் வீட்டும பருவப் போர்ச்சருக்கப் பாடல் வரிகள் வீமன் இரண்டாம் நாள் போரில் உக்கிரமாகப் போரிட்டு யானை வீரர்களோடு வந்த கலிங்க மன்னனான சக்கரதேவனை வென்ற செய்தியினை மெய்ப்பிக்கின்றன.

விறைப் பெரும் பணை வேழம் முன்னொடு
பின் துணிந்து தரைப்படும் (கலிங். களம். பா.498)

மூன்றாம் பிறை சந்திரனைப் போன்ற பெரிய தந்தங்களுடைய யானைகள் முன்பகுதி பின்பகுதியென துண்டிக்கப்பட்டு கிடப்பதைக் கலிங்கத்துப்பரணி களம் பாடல் விவரிக்கின்றது. அக்காட்சியைப் போன்று வீமன், கலிங்க மன்னனின் மூன்று மதங்களையுடைய யானைகள் அனைத்தையும் தனது வலிமையுடைய கைகளாலே துதிக்கைகளைப் பிடித்து வீசிய போது அவனின் வீரம் பார்போற்றும்படி வெளிப்பட்டன.

Isbn Number: 978-93-91115-47-0

மேலும், பதினாராயிரம் யானை பலமுடைய வீமனின் வீரத்தைப் பற்றி பேசும் பொழுது,

மடங்க எறிந்து மலையுருட்டும் நீர்போல
தடங்கொண்ட ஒண்குருதி கொல்களிறு
ஈர்க்கும் (கள.நாற்.பா.160)

செங்கணான் மன்னன் போர்க்களத்தில் பகையரசனுடைய யானைகளை வெல்லும் பொருட்டு சினத்துடன் போர்ச் செய்ய விரும்பிச் சென்று யானைகளின் முகத்தில் அம்பு மழை பொழிந்து நிலத்தில் வீழச் செய்ததை மேற்கண்ட களவழி நாற்பதின் பாடல்வரிகள் எடுத்தியம்பும் செய்தியோடு ஒப்பிட்டுப் பார்க்க வைக்கிறது.

நான்காம் நாள் போர்

நான்காம் நாளிலும் வீமன், துரியோதனன் படை கருட வியூகம் அமைத்து போரிட்ட போது வேழப்படைகளை வளைத்துக் கடுமையாகப் போரிட்டு தனது வீரத்தை வெளிப்படுத்தியிருக்கிறான்.

ஐந்தாம், ஆறாம், ஏழாம் நாள் போர்

வீமன், ஐந்தாம் நாள் போரில் துச்சாதனன் மற்றும் பூரிசிரவரசு போன்றோருடன் போரிட்டான். வீமன், ஆறாம் நாள் போரில் சல்லியன், துரியோதனன் மற்றும் அவன் தம்பியரோடு போரிட்டான்.

Isbn Number: 978-93-91115-47-0

ஏழாம் நாள் போரில் சகுனி, சல்லியன் இருவரையும் நிலைகுலையச் செய்து, துரியோதனன் படைகளை வீமன் பின்னடையச் செய்துள்ளான்.

எட்டாம் நாள் போர்

வீமன், எட்டாம் நாள் போரில் துரியோதனன் தம்பியர் எண்மரைக் கொல்கிறான். பாம்பு வடிவம் எடுத்த இரவானை, கருட வடிவம் எடுத்து அலம்புசன் கொல்கிறான். வீமன் இச்செய்தி அறிந்து சினம் கொண்டு மீண்டும் துரியோதனன் தம்பியர் எழுவரையும், பகாசுரனை அழித்தது போன்று அலம்புசனையும் கொடூரமாகக் கொல்கின்றான்.

பன்னிரண்டாம் நாள் போர்

வீமன், பன்னிரண்டாம் நாளில் சக்கர வியூகத்தில் சிக்கிய அபிமன்யுவைக் காப்பாற்ற துரியோதனன் படையோடு போரிடுகிறான்.

பதினான்காம் நாள் போர்

வீமன், பதினான்காம் நாள் போரில் துரியோதனனின் தம்பியர்கள் முப்பது பேரை மாய்த்து தனது பெரும்வீரபலத்தைக் காட்டியுள்ளான். மேலும் பூரி, அவந்தி அரசன் மற்றும் துரியோதனன் தம்பியான விகர்ணன் உட்பட பலரை களத்தில் வீமன் மாய்த்துள்ளான்.

பதினேழாம் நாள் போர்

Isbn Number: 978-93-91115-47-0

வீமன், பதினேழாம் நாள் போரில் துச்சாதனனும், அவன் தம்பிமார் ஒன்பதின்மரை எதிர்த்து போரிடுகிறான். வீமன் துச்சாதனனை நோக்கி, உன் தலையை அறுத்து, வழிகிற இரத்தத்தில் மூழ்கி, தாகம் கெட நாக்குக்குப் பொருந்திய குளிர்ந்த நீரை கையால் அள்ளி பருகும் நாளும், அக்கினியிற் பிறந்த திரௌபதி இருளையொத்த கூந்தல் மயிரை முடிக்கும் நாளும் இன்றோ? என்றும், உனது தமையனான துரியோதனனை நாளைக்கே தேவர்கள் எதிர்கொண்டு அழைத்துப் போகும் படி அனுப்புவேன் என்றும் கூறி தான் செய்த வீரசபதத்தினை முடிக்கும் நோக்கத்தில் வீரவார்த்தைகள் கூறியதை;

இன்றோவுன்றன்சென்னிதுணித்திழிசெம்புனலிற்
குளித்திடுநா
ளின்றோவழலினுற்பவித்தாளிருளாரளக
முடித்திடுநா
ளின்றோதாகங்கெடநாவுக்கிசைந்ததண்ணீர்
பருகிடுநா (வில்.கன்.17ம்போர்.பா.138)

என்ற வரிகளும்,

வென்றேயவனிமுழுதாளும்வீரோதயனின்றம்
முனையுங்
கொன்றேநாளையமரரெதிர்கொள்ளக்கடிதின்
வரவிடுவன் (வில்.கன்.17ம்போர்.பா.139)

Isbn Number: 978-93-91115-47-0

என்ற கன்னபருவ பதினேழாம் பாடல் வரிகளும் விளக்குகின்றன. இவ்வீரசபத வார்த்தைகளைக் கேட்ட துரியோதனன் தம்பிமார்கள் ஒன்பதின்மரும் வெகுண்டு வீமனை எதிர்க்க, வீமன் அவர்களை அழித்தவிடுகிறான். பின் விமன் துச்சாதனனோடு வில்போர் புரிந்து, கொடிய கதாயுதப் போர் புரிந்து இறுதியில் கடுங்கோபத்துடன் போரிட்டு ஆயுதங்களையெல்லாம் ஒழித்து கால்முட்டியினால் போரை மேற்கொண்டு நரசிங்கமூர்த்தி இரணியனைக் கொன்றது போல துச்சாதனனை அழித்து மனமகிழ்ச்சி அடைகிறான்.

பதினெட்டாம் நாள் போர்

வீமன், பதினெட்டாம் நாள் போரில் சல்லியனோடு போரிட்டு புறம் செல்ல வைத்து, துரியோதனனோடு அம்பு தொடுக்கிறான். தேர்க்குதிரை, சாரதி, வில், குடை எனும் அனைத்தும் துணிக்கப்பட்டுக் கீழ்விழும் படி துரியோதனனோடு போர் புரிந்தள்ளான். பின் சகுனி சேனைகளையும் அழிக்கிறான்.வீமன் தன் வீரசபதத்தை எண்ணுகிறான். பெருங்கோபம் கொள்கிறான். துரியோதனனை வெற்றி கொள்ள முற்படுகிறான்.

இலைபுனை வாகை சூடி இகல்மலைந்து
அயலகடல் தானை அரசட் டார்த்தன்று
(புற.வெண்.8-1)

Isbn Number: 978-93-91115-47-0

என்ற புறப்பொருள் வெண்பாமாலையின் பாடல்வரிகள் கூறுவதற்கேற்ப வீமனிடம் பகைவேந்தனை வெல்லும் வீரம் நிறைந்திருந்தது. அவ்வீரத்தை மெய்ப்பிக்கும் விதமாக வீமன் துரியோதனை அழித்துவிட முற்பட்டான். கிருட்டிணர் அறிவுரைப்படி, பரசுராமன் நரமேதஞ் செய்த இடத்திலே போரைத் தொடங்குகிறான் வீமன். துரியோதனன், வீமனை நோக்கி உன் உயிர்நிலை யாது? என்று வினவ வீமன் வாய்மைத் தவறாதவனாய் துயிர் துணைவாகேள் சிரத்திலேயென என்று அச்சமில்லாமல் கூறுகிறான். பின் வீமன் உன் உயிர்நிலை யாது? என்று வினவும் போது உண்மைத் தவறும் பண்பாளன் பாம்புக் கொடியோனாகிய துரியோதனன், *இகனுதலூரடே யெனக்குமாருயிரென* என்று தவறான பதிலைக் கூறுகிறான். வீமன் பெருஞ்சினம் கொண்டு கடுமையாகப் போரிடுகிறான். வீமன் தன் கதாயுதத்தால் துரியோதனனின் தொடையைத் தாக்கினால் உயிர் பிரிந்து விடும் என்று கொல்லும் வகையை அருச்சுனன்வழி வீமன் குறிப்பால் உணர்ந்து கொள்கிறான். பின் வீமன், துரியோதனன் தொடையைத் தாக்கிப் போர் புரிந்தமையை,

மோனவண்குறிதானுணராவெதிர் மோதினன்
கதைபூபதியூருவின் (வில்.சல்.18ம்போர்.பா.184)

Isbn Number: 978-93-91115-47-0

என்ற வரியும் கதாயுதத்தால் மீண்டும் மீண்டும் தாக்கிக் குருதி பெருகும்படி குற்றுயிராய் கிடக்கச் செய்தமையை,

…சுயோதனனற்பமுயிர்நிலை நிற்ப நீடுடன்
முற்று முகுகுரு திக்கண் மூழ்குற மொய்த்த
கழுகினிழற்கண்மேவினன்
(வில்.சல்.18ம்போர்.பா.196)

எனும் சல்லிய பருவப் பதினெட்டாம் போர்ச்சருக்கப் பாடல் வீமனின் வீரச்செயல்களை வர்ணிக்கின்றன.

தொகுப்புரை

வீமனின் வீரசபதமே அவனைப் பெரும்போர் புரியச் செய்தது. அப்போரின் மூலமே வீமனின் வீரபலத்தை அனைவரும் அறியமுடிந்தது. இடிம்பன், பகன், புண்டரீகன், மணிமான், மல்லன், கீசகன் மற்றும் உபகீசகர்கள் போன்றோரை வென்ற விதமும், சூதாட்ட நிகழ்வின் போது சபதமிட்ட விதமும் வியப்பிற்குரியதாகவே காட்சியளித்தது. வேழப்போர், விற்போர், மற்போர் மற்றும் கதாயுதப் போர் போன்ற போர்களை மேற்கொண்ட வீமனின் பலத்தை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. பல அரசர்களையும், துரியோதனன் தம்பிமார்களையும், சபதமிட்டதற்கேற்ப துச்சாதனனையும் அழித்தவிதமும் வீமனின் யானைபலத்தைப் பறைசாற்றுகின்றன. இறுதியில் துரியோதனனைக் கொன்ற நிகழ்வுகளே வீமனது அசுர,

Isbn Number: 978-93-91115-47-0

இராக்சச, பைசாச, சர்ப்ப மற்றும் சகுன பண்புகள் நிறைந்த இராட்சச வீரதீரப்போரிடும் குணத்தைத் தெளிவுறக் காட்சிப்படுத்தின. இவ்வாறு வீமனின் வீரதீரச்செயல்கள் மற்றும் போர்களத்தில் வீமன் போர்புரிந்த விதங்கள் அனைத்தும் இப்புத்தகப்பகுதி ஆய்வுக்கட்டுரையின் வழி ஆராயப்பட்டுள்ளன.

துணைநூற்பட்டியல்

[1] வை.மு. கோபாலகிருசுணமாச்சாரியார் (உ.ஆ). *வில்லிபுத்தூராார் வில்லிபாரதம்*. உமா பதிப்பகம், சென்னை – 600001, 2013.

[2] சுவாமி. *மகாபாரத அரசியல்*. அநுராகம், சென்னை-600017, 2005.

[3] ந.சுப்புரெட்டியர். *பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு*. சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1982.

[4] ச. தண்டபாணிதேசிகர். *திருக்குறள் உரைக் களஞ்சியம்*. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1981.

[5] பெ. பழனியப்பன், *கலிங்கத்துப்பரணி குறிப்புரைகள்*. கழக வெளியீடு, சென்னை, 1965.

[6] மு. சண்முகம் பிள்ளை. *பதினெண் கீழ்க்கணக்கு தெளிவுரை*. முல்லை நிலையம், சென்னை, 1982.

[7] புலியூர்கேசிகன், *புறப்பொருள் வெண்பாமாலை*. சாரதா பதிப்பகம், சென்னை, 2009.